ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

இதழ் 2 சித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் 15ம் திகதி வெள்ளிக்கிழமை [29-6-1979] சுடர் 14

1979-7-16 PERIODICALS DIVISION

# வேதம் கற்று கற்றவாறு ஒழுகி செந்தீ வளர்த்த சிறப்பால் கலி நீக்கும் அந்தணரது தில்லைச்சிதம்பரம்.

கோயில் என்றும் பெரும் பற்றப் புலியூர் என்றும் திருச்சிற்றம் பலம் என்றும் தில்லை அமபலம் என்றும் பல பல பெயராகி நிகழ்வது சிதம்பரம்.

சிதம்பரத்திலேதான் திருக்கூத்து முதல் முதலாக பதஞ்சலி வியாக்கிரபாதராகும் அந்தண முனிவர்க்கு அருள் செய்யப் பெற்றது. இறைவனது திருக்கூத்தை; எல்லார்க்கும் பொதுவான நடனத்தை தரிசிக்க பதஞ்சலி வியாக்கிரபாதர் எனும் இரு முனிவரும் ஆசையுற்றனர். அந்த ஆசையின் விளைவால் தில்லைச் செடிகள் காடு போல் செறிந்து பரந்திருந்த அந்த வனத்துள் தங்கி யாகம் செய்தனர் இறைவன் திருக் கூத்து தரிசிக்க முடியவில்லை. அதனுலே அவர்கள் மனம் வைராக்கிய முற்று தாம் செய்த யாகத்தில் வளர்த்த அக்கினியில் தமது தலையை அரிந்து சிவனுக்கு அவியாக யாக குண்டத்து இட்டனர். உடன் காண்டற்கரிய கடவுள் தம் திருக்கூத்தை அவர்க்கு அருள் செய்தார். திருநடனம் கண்டருளிய அப் பேற்ருல் அப்பதி என்றும் திருவருள் நிறைந்த புண்ணிய இடமாகக் கருதப்பட்டு ஈசன் திருக்கூத்தைத் தரிசித்து தொண்டு புரிய சிவன் அருளால் சிவ் கணங்கள் அந்தணராக அப்பதியில் அவதரித்து அப்பதியில் பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆரம்பித்த அந்த அக்கினியை நீள வளர்த்து சிவன் அருள் பெருக்கி வந்தனர். இந்த இடத்தில் அந்தணர் வளர்க்கும் அக்கினி கலி நீக்கும் வல்லமை உடையது என திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகத்தில் இதைச் சிறப்பிக்கின்ருர்.

சிதம்பரத்தை முதன் முதலாகத் தரிசிக்க வரும் பொழுது திருஞானசம்பந்தருடைய உணர்வில் சிதம்பரத்தில் வாழும் அந்தணர்களது உயாவே தெரியப் படுகிறது. ஆதலினுலே எம்பிரானைச் சிதம்பரத்தில் நேராகத் தரிசித்துபாடும் பொழுது சிதம்பரத்து வாழ்கின்ற அந்தணரைச் சிறபபித்து எடுக்கும் வரியே பாடலில் முன்வருகின்றது. "கற்றங்கு எரி ஓம்பி கலியை வாராமே செற்ருர் வாழ தில்லைச் சிற்றம் பலம்" எனவே தமது ஈசனைப் பாடும் பதிகத்து முதல் அடிபாடிக் கொள்கின்ருர்.

இறைவனை அங்கு தரிசித்து பாடியருளிய அப்பதிகத்தைக் கீழே தருகின்ருேம், முதல் வரியில் அந்தணரைச் சிறப்பித்த பொழுது அவர்களை கற்றவர் கற்றவாறு ஒழுகுபவர் அந்த ஒழுக்க நெறி வழுவாது நின்று நித்தலும் சிவனுக்கு என அக்கினி வளர்த்து அந்த சிவ அக்கினியில் ஆகுதி செய்து அதனுல் வரும் அருட் பெலத்தால் கலியை வராதபடி அழித்திடுவார்; என்றதையே தாம் பாட எடுத்த பதிகத்தின் முதல் வரியாகக் கொண்டு அப்பாடலைப் பாடினுர். இதனுலே இப்பதிகத்தை உணர்ந்தால் கலி என்றதன் அர்த்தம என்ன? அதை முதல் நம் மக்கள் உணர வேண்டும்! கரவு என்பதறியாத தூய உள்ளத்தை எப் பொருள் வருவிக்க முடியாது தடை செய்கின்றதோ அப் பொருளை நாம் கலி என்றே சொல்லலாம். கலி என்பது மனத்தை தீயவழி ஈர்த்துச் செல்வது. அதிக ஆசை கொடுப்பது. உணவில் உடையில் நடையில் விஞேத மனப்பாங்கை உண்டாக்கி விடுவது. பொருமை வஞ்சகம் கோபம் இவை எல்லாம் கலியின் கொடுமை என்றே நாம் சொல்வோம்.

இந்த யுகத்திற்கே கலியுகம் என்று பெயர். இச்சை வசப்பட்டயுகம் என்று பெயர். இன்று எமது தமிழ் பெண்கள் இச்சை மிகுதியால் தத்தமக்குரிய நெறி கெட்டு ஒழுக்கம் கெட்டு மரபு கெட்டு மானமும் கெட்டு ஐயோ சொல்லொணுத அல்லல் பெருக்கும் நிலையில் அமைந்துள்ளனர். இதுயுகத்திற்கு ஏற்றதாகக் கருதப் பட்டாலும் இவர்களது நடத்தை செயல் யாவும் கலியின் பெருக்கமே! சைவ நெறியில துயர் விளைக்கும்.

பெண்ணினம் தமது சீருடை எல்லாம் களைந்து விட்டு மிலேச்ச நாட்டின் உடை கண்டு அதைப் பின்பற்றி தாமும் கால் சட்டை போட்டுக் கொண்டு தெரு வீதி உலாச் செய்கின்றனர். குமர்ப் பெண்கள் நாளுக்கு நாள் இதில் பெரும் முன்னேற்றம் காண்கின்றனர். அன்ருெரு நாள் நாவலர் சந்தியில் ஒரு கன்னிப் பெண் கால் சட்டை போட்டுக் கொண்டு தனது காதலனுடனே வேறு யாருடனே அறியோம் கைகோத்தபடி வந்தது. அதின் கால் சட்டையின் அரையில் பூட்டிய பட்டன்கள் நன்குபூட்டப்பெருதவாறு அலங்கோலமாக இருந்தன. ஓரளவு நிர்வாணக் கோலம் என்றே நாம் சொல்லக் கூடியது. இப் பெண் எவருடைய கவனத்தையும் ஈர்க்கக் கூடிய அழகாக இருந்தது. இருவரும் அணைந்தவாறு வரும் கோலத்தை சந்தியில் பஸ் வண்டிக்கு காத்து நின்ற அனைவரும் பார்த்தனர். பார்த்துப் பார்த்து தத்தமக்குள் [illegible] அருகிருப்பாரைச் சுறண்டிக் காண்பிப் பா[illegible]

சயிக்கிலில் வந்த யான் எனது அருகாமையில் வந்த ஆசிரியர் ஒருவரைக் காண்பித்து எப்படி கலிகால நாகரீகத்தின் உச்சக் கட்டம் என்றேன். அத்துடன் இனிப் பெண்கள் துணிகின்ற துணிச்சலுக்கு உடல் உறவும் பகிரங்கமாகச் செய்வதில் அதில் தவறில்லை எனப் போகிருர். மானம் என்றது இக்காலத்தில் இனிப் பார்க்க முடியாது எனும் நிலையாகி உள்ளது எனக் கூறிய வாறு நாம் இருவரும் போனேம்.

உண்மையாக கலி என்றதின் அர்த்தம் கட்டுப் பாடிலாத மிருக வாழ்வு எனவே சொல்லலாம். ஒவ்வொரு மனிதனும் மிருகத்திலும் உயர்ந்து நிற்கிருன் எதனுல் என்ருல் கட்டுப் பாடான ஒழுங்குடைய சீவியத்தைக் கடைப்பிடிப்பதால், ஆகவே மனிதன் தன்னிடத்தில் பேணப்பட வேண்டிய உயர்ந்த சீலங்களை கீழ் இறக்கிட வழி செய்தது கலிஎன்றதாகும், துர் நடத்தைக் குரிய செயல் யாவும் கலி எனவே நாம் சொல்வோம்.

ஆகவே யுகத்திற்குரிய நிலையாக கலிதனது வேகத்தைக் காண்பித்தால் அந்த வேகம் பரவி தம்மிடத்திலோ தமது குடும்பத்திலோ அயலிலோ விபரீதச் செய்கைகளை மிருக வாழ்வை பெருக்க முடியாதபடி தடுத்திடும் வலிகொண்ட சிவாக்கினி வளர்த்து சிவனுக்கு ஆகுதி கொடுப்பவர் சிதம்பரத்து அந்தணர் என்றதால் கற்று ஆங்கு எரியோம்பி கலியை வாராமே செற்ருர் வாழ் தில்லைச் சிற்றம் பலம் என்றதாக பாடியருளினுர்.

இப்படி அந்தணர் சிறப்பை எடுத்து மொழிந்த வாறு, இதை உணர்ந்து கொண்டு இன்றுள்ள பிராமணரை எடுப்போம்.

இவர்களது வாழ்வு மேலே சொல்லிய அந்தணர்களது வாழ்விற்கு எதிர்மாருக உள்ளது. இவர்கட்கு முதல்முறையாக வேதக் கல்வி இல்லை. கல்வி பெருத பொழுது ஒழுக்கத்தைப் பற்றிப் பேச முடியாது! இவர்கள் கலியை வராது அழிப்பதை விடுத்து கலியைப் பெருக்குகின்றவராகின்ருர். எந்த ஒரு அந்தணர் வீட்டில் போனுல் ஒரு தெய்வீக உணர்வு காணலாம்.

உண்மையாக யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஒரு பிராமணரது வீட்டில் நுழைந்தால் இவரை வேத வழி ஒழுகும் சீலமுடையார் எனச் சொல்லக் கூடிய ஒழுக்கமுடையாராகக் காண்பிக்கக்கூடிய எ செயல் அங்கு இருக்கிறது?

ஆனைக்கோட்டையில் உள்ள ஒரு பெரிய கோவில் குருக்களின் வீட்டில் முன் அறையில் எம் ஜீ ஆர் உடைய புகைப் படம் தூங்குகின்றது. இதன் அர்த்தமென்ன? வானெலி சினிமாப்பாடல் என்றும் ஓயாது பாடுது. அடுத்து அவரது இல்லம் ஓர் வியாபார நிலையம் இது தகுமோ? பெரியோரே சிந்தியுங்கள். இப்படியான ஒரு பிராமணரைக் கொண்டு பூசை செய்விப்பதிலும் எல்லா மக்களும் தாம் தாம் அறிந்த அளவில் பூவும் நீரும் தூபப் புகையும் விளக்கும் கர்ப்பூரமும் எடுத்துச் சென்று அக்கோவிலில் இறைவனை வழிபட்டால் கடவுள் வேண்டாமென்று சொல்லி விடுவாரோ?தள்ளிவிடுவாரோ?

பத்தியால் பசுவின் கன்று கட்டிய கட்டைக்கு ஒரு துளி பாலும் பூவும் வைத்து வழிபட்ட பெண் ஒருத்திக்கு சிவன் வெளிப்பட்டார் என்ருல் அன்பினுல் நாம் சென்று வழிபடும் பொழுது கருணைக் கடலான கடவுள் நம்மைக் கைவிடுவாரோ?

சிவபெருமானும் கலிகாலப் பிராமணர் போல் இருப்பார் என நீங்கள் எண்ணுகின்றிரோ? எங்கே இருந்து உண்மையான சீல ஒழுக்கங்களுடன் நினையும் அன்பர்க்கு அங்கே வந்து அருள் புரிபவன் சிவன் என சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்கின்ருர். இதை மக்கள் சிந்தித்தால் நலம்.

சிவன் காண்டற்கரிய கடவுள் ஆனுல் கரவு இலாத உள்ளமொடு கருதுவார்க்கு மிகவும் எளியவன் கைவிடான். அவன் தீது ஏதும் இல்லாத நன்மை தரும் அருட் குன்று. நீங்களும் தீது ஏதும் இன்றிச் சென்று வழிபடும் பொழுது தீங்கிலதாவராக உம்மை என்றும் பாது காப்பான்.

இப்படியான ஒழுக்கம் இலாத பிராமணன் பூசை செய்யும் கோவிலிற்கு அருச்சனைத் தட்டம் கொண்டு போவதால் அவனது பழியில் நீங்களும் கொஞ்சம் பெறுகிறீர். கடவுள் கூடஇருக்கிருர். பயப்படாமல் உண்மைவழி நின்று பேணிப்பாருங்கள் திருவருள் நிச்சயம்கிடைக்கும்.

பிளாக்மார்க்கெட் யாவாரிக்கும் கொலைகாரருக்கும் பழி பெருக்குவோர்க்கும் பொய்யர்க்கும் காவாலிகட்குமே ஒழுக்கமிலாத பிராமணன் தேள்வை. தங்கள் போக்கை இத்தகைய பாதகப் பிராமணன் ஆதரிப்பதோடு முபபத்தி மூன்று குண்டம் போட்டு கும்பாபிஷேகமும் செய்வான்.

முப்பத்து மூன்று குண்டமல்ல முப்பதாயிரம் குண்டத்தில் இந்தப் பழிகாரப் பிராமணன் அடுப்பூதினுலும் நாட்டில் கலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்குமோ? பிராமணனே ஓர்கலியாக தான் நின்று கொண்டுஉண்மையான வேதநெறிக்குரிய அடக்கமுடையதூயகிரியைகளில் ஓலிபெருக்கி மின் ஒளி வீம்பு விண்ணுணம் முதல் அனைத்தும் பாவித்து கிரியை செயதால் இவனை கலிபெருக்கி எனச் சொல்லாது வேறு என்ன சொல்லலாம்.

இதை நீக்குவார் தான் உண்மை அந்தணர், அவரால் தான் உலகில் நன்மையை விளைவிக்க முடியும். ஏனையர்கலப்பு கலியாணத்திற்கும் அத்துடன் அம்பட்டத் தொழில் பார்க்க சீவல் தொழில் செய்ய மீன் விற்க இறைச்சிக் கடை வைக்க இதற்கே உரியர். இன்று ஒரு அந்தணர் மிக்க கவலையுடன் இதைச் சொன்னவர், ஐயா இன்று வேதநெறிக்குரிய பிராமணன் தன்னால் சரிவர நடக்க முடியாத போது தனது பூசை பண்ணும் தொழிலை விட்டுட்டு வேறு எந்தத் தொழில் என்றாலும் மீன்யாவாரியாக என்றாலும் வேறு எந்தத் தேசத்திலும் போய் மீன் விற்கட்டன். இங்கு இருந்து கொடியும் ஏற்றி மீனும் விற்க இது எல்லாரையுமே பழுதாககுகின்றது. தன்னால் ஒழுகமுடியாததை வைத்துக் கொண்டு சமயத்தையும் பழுதாக்கி கோயிலையும் ஏன் பழுதாக்குவான். அரசியல் செல்வாக்கிற்காக அருமந்த நெறியைக் கெடுக்கிறதோ எனச் சொன்னவர். இவர் கொக்குவிலைச் சேர்ந்த ஒரு அந்தணர். அவர்க்கும் எல்லாம் விளங்குகின்றது. கவலைப்படுகிறார். ஆனால் உலக நிலை மாறும் வேகத்தில் தாங்களும் நின்று தடுமாறுகிறோம் என்றார். இன்று சமயநெறி விளங்காது பல தீங்கையும் பெருக்கும் பலபிரமுகர் பிராமண சமுதாயத்தை தமது செல்வாக்கிற்காக கீழ் இறக்கிடும் தொழில்களில் இறங்கும் படி வழி காட்டினால் பிராமணர்கள் சீலம் நெறி உணர்ந்து தம் கிரியைகளை செய்து கலியை நீக்கி உலகை உய்விப்பது எவ்வாறு?. திருஞானசம்பந்தர் வாழ்க எனச் சொல்லிய பிராமண சமுதாயத்தை ஆழ்க எனக் கூறி அழித்தொழித்து விட்டனர். இதல் மடங்கள் ஆதினங்கள் பெரும் பங்கு கொள்ளுகின்றனர். ஏனெனில் பிராமணர்களதுஉயர்வை ஆதினங்கள் விரும்பவில்லை. இதன் நோக்கம் பிராமணர் உயர்வைக் காட்டினால் ஆதினங்கள் தம்முயர்வு கெட்டுவிடும் என அஞ்சுகின்றனர். திருஞான சம்பந்தர் போரால் இயங்கும் ஆதினமே இந்த பிராமண சமுதாய நெறியை அழித்திடும் வஞ்சனைச் செயலில் முன் நிற்கிறது.

பிராமணர்களை அவர்கள் ஒழுகி வரவேண்டிய உயர்ந்த நெறிகளை கைவிடப்பண்ணுவது மிகு சுலபம். ஆனால் அவர்களை உயர வைப்பது மிகு கடினம். உயர வைத்தல் உணர்ந்தோரால் தான் முடியும். உணராத மக்களால் அது முடியாது.

ஆகவே கலியை நீக்க வல்ல அந்தணருடைய பெருமையை முன் வைதது பாடியருளிய பதிகத்தை கீழே தருகின்றோம்.

எங்கும் சிதம்பரம் எங்கும் திருக்கூத்தாம் படி உணர்ந்த பெரியோராம் தில்லைவாழ் அந்தணரின் பாதகமலம் பேணி வணங்கி சிவன்வாக்கில் திருத்தொண்டத் தொகைப் பதிகத்தை பாடியருள்தற்த முதல் வாக்காக அருளப் பெற்ற அவர் பெருமையை நாம் சொல்ல முடியாதெனினும் கலிவேகமுடன் பரவும் காலத்தில் முதற்கண அதன் கைப்பிடியில் சிக்கி அவதியுறும் அந்தணர்கள் தம் பெருமையும் உயர்வும் உணர்ந்து சிறுமையும் தீமையும் மறந்து நன் நெறிபட்டு வாழும்படியும் சைவ மக்கள் யாவரும் ஒது சிவன் அருட்பாதுகாப்பில் நன் நெறியுடன் நீடூழி வாழும்படியும் இப் பதிகத்தை இங்கு தருகின்றோம். அந்தணர்களது அருள் நிலையின் உயர்வில் உலகம் தங்கி உள்ளது என்பது இப்பாடலால் தெளியலாம்.

திருஞானசம்பந்தர் தில்லையுள் ஈசனைப் பாடிய பதிகம் இதுவாகும்.
பன்—குறிஞ்சி

**கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே**
**செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே**
**பற்று நின்றாரைப் பற்று பாவமே.**

வேதத்தினை முறைப்படி கற்று; கற்றவாறு அங்கு ஒழுகி அக்கல்வியின் பயன் உணர்ந்து சிவனிற்கு என அக்கினி வளர்த்து ஆகுதி பண்ணி அதனால் அருளின் வலி மிகுந்து தான் வசிக்கும் இருப்பிடத்து கலி வராதபடி அழித்திடும் ஆற்றல் உடைய அந்தணர் வாழும் தில்லைச் சிதம்பரத்து; முற்றாத வெண்மை நலமுடைய இளம் பிறை சூடிய எவற்றிற்கும் மூல முதல்வன் சிவன் திருவடிகளை தாம் பற்றும் பற்றாகக் கொண்டார்க்கு பாவங்கள் வந்து பற்றாது.

கலி என்பது துயரம் விளைப்பது. பாவங்கள் கலியினால் விளைவன. கொலைகற்பழித்தல் நீயிடுதல் வஞ்சித்தல் திருடல் முதலியன பாவச் செயலாகும். இவற்றை கலிதான் பெருக்குவது. இந்த கலியை முறையான சிவாக்கினியை வளர்த்தலின் மூலம் அழித் தொழிக்கலாம் என்பதைத் தெளிய கல்வியின் மகத்துவம் முன்னர் சொல்லப் பட்டது. ஒருவருடைய சிந்தை கலியில் சிக்காதபடி அந்தணர் வளர்க்கும் ஓமாக்கினி கவசம் போல்வதும் படை போல்வதுமாக அமைதலின் தமது இருப்பிடத்து கலியின் துயர் பெருகாது பாது காப்பதும் அன்றி அழித்திடுவதும் கூறப்பட்டது. அந்தணர்க்குவேதக்கல்வியின் அவசியம்உணர்த்தப்பட்டது. 1

**பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்புஞ்**
**சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை**
**மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே.**

பறப்பையை [சுருக்கு சுருவம்] இவற்றை விதி முறையால் பூசித்து வணங்கி அருள் பெற்று குண்டத்து அக்கினி வளர்த்து எல்லாவிடமும் இந்த ஓமத் தீயை பெருக்கும் போது [பசு] ஆடு அதனைப் பலிஇட்டு சிவனது அக்கினி வளர்க்கும் பெரும் சிறப்புடைய அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்து இருக்கின்ற பிறப்பிலாத பெருமானை; பின்புறம் தாழவிளங்கும் சடை உடையவனை மறப்பிலாதவர்கள் தான் மக்களே கண்டு கொள்ளுங்கள் தமது மயக்கங்களை ஆசைகளை அறித்திடுவார்கள்.

தில்லைச் சிவன் திருவடி சிந்திப் பாரால் தான் ஆசை அறுத்திடலாம். அது அல்லார் முடியாது என்றபடி. ஏனையோர் எவர்க்கும் அது இயலாத காரியம். ஆசை தான் கலி. அந்த ஆசையினை மெது மெதுவாகத் தீர்த்தல் சிவன் அருளால் வருவது என்பது துணிவு 2

பசுவேட்டு எரி ஓம்பும் சிறப்பர் என்றதால் முன்னர் புன்மையான பசு (ஆடு) இதனை ஆகுதி செய்து பின்னர் எழுப்புதல் மரபு. இதனை புன்மையாம் பசுத்தடிந்து புரையில் வேள்வி ஆற்றி பின்னர் எழுப்புமாறு எனக் கந்தபுராணம் கூறுகின்றது. இந்த வேள்வியை சமணர் ஆட்டினைப் பலி இடுவது சரி அல்ல என்று நமது சைவ வேள்விகளை பரிகசித்து இழித்தனர். இவை உலக சேமத்தின் பொருட்டு செய்யப் படுவதாதலின் வேதத்தில் விதிக்கப்பட்டன. இதனை சம்பந்த சுவாமிகள் பிறிதொர் பதிகத்து வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி அமணர் என்றார். சமணர் இதன் தூய்மை விளங்காது இழித்தலால் ஆதமில்லிகள் என அவரைச் சம்பந்தர் கூறுகின்றார். இவை எல்லாம் குரு சீட முறைப்படி ஒழுகும் அந்தணர்க்குத்தான் விளங்கும் இன்று வேதக் கல்வியிலாத பிராமணரே உள்ளனர். ஒன்று கேட்டால் பதில் சொல்லமாட்டாதவரே இருக்கின்றனர். அப்படியான நிலையில் நாம் இதைப் பற்றி பேசி என்ன பிரயோசனம். முன்புள்ள அந்தணர் யாகத்து ஆகுதி செய்த ஆட்டை எழுப்பிட வல்லார் என்றதால் எரி ஓம்பும் சிறப்பர் என்றார்.

**மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்**
**கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்**
**பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்**
**செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே.**

மைதீட்டிய அழகிய கண் உடையவராகும் பெண்கள் மாடங்கள் நிறைந்த நெடிய திருவீதியில் கையால் பந்து எறிந்து விளையாடும் கழிக்கானல் நலம் சூழ்ந்த தில்லை சிதம்பரத்துள் என்றும் பொய்யாத வேதமாய பாடலைப் பாடியருளியவரும் உலகம் எல்லாம் போற்றும் படி செம்மையான நெறியில் நின்றவனாகி இருக்கும் சிவன் உறைகின்ற கோயில் சிற்றம்பலமேயாகும்.

சிதம்பரத்தின் புற விதிகளில் மாடங்களின் நிறைவு செல்வப்பெருக்கைக் காண்பிப்பது. கழி சூழ் நிலம் என்றதால் அருளின்சிறப்பால் அமைதியின்காட்சிகள் காண்பித்தவாறு. வேதங்கள் எக்காலத்திலும் பொய்யாதன என்றதால் பொய்யாத வேதம் என்றார். கலிபெருகிய காலத்தும் வேதம் மாறுவதில்லை. உண்மைப்பொருளாயும் கேடில்தாத நன்மைப் பொருளாயும் உள்ள சிவனிடத்து தோற்றியதால் வேதம் அது பொய்யாது எனப்பட்டது. அதன் உண்மை நிலைகு மக்கள் உயர்ந்து உணர்வதன்றி மக்கள் மனம் திரும்பும் பொய்மைக்கு வேதம்மாறாது மாற்றவும் முடியாது என்றார். உலகம் போற்றும் செய்யான் உறை கோயில் என்றதால்: சிவன் செம்மை உடையவன் என்றவாறு. செம்மை எவ்வாறு வரும் கொலை மூலம் பொய் மூலம் ஏமாற்று மூலம் செம்மை வருமோ? வராது. இதனை சிந்தித்தல் நலம். செம்மை மூலம் தான் அருள் பெறலாம்; இல்லையேல் இல்லை என்றதால் செய்யான் எனப்பட்டது. 3

**நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்**
**பிறைவந் திறைதாக்கும் பேரம்பலந் தில்லைச்**
**சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய**
**இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே.**

நிறைவுடைய வெண் கொடிகள் நாட்டிய உயர்ந்த மேல்மாட முகப்புகளின் மீது இளம் பிறை தனது போக்கில் இறைப் பொழுதாகிலும் தாக்கிச் செல்லும் பேரம்பலம் விளங்கும் தில்லைச் சிதம்பரத்து சிறகுடைய வண்டுகள் தம்பாடல்களை குறைத்திடாத சிற்றம்பலத்துள் இருந்தருளும் இறைவன் திருவடி போற்றிடும் செயலில் எழப்படும் இன்பம் தான் இன்பமாகும்.

தில்லைச் சிதம்பரக் கோயிலில் எழுந்தருளி மூர்த்திகள் இருந்தருளும் இடம் பேரம்பலம் என்றும் காண்டற்கரிய அதிசயக் கூத்து நிகழும் இடம் சிற்றம்பலம் எனவும் அழைக்கப்படும் பேரம்பலம் உயர்ந்த மாடம் போல் அமைந்து அதன் முகப்பில் வெண்கொடி நாட்டப் பெற்றிருப்பதால் பிறையும் எம்பிரானது திருமேனிச் சடையோ எனக் கருதி ஓர் இறைப்பொழுது முட்டிப்பார்க்க எத்தனிப்பதை பிறை வந்து இறைதாக்கும் என அருளின் சிறப்பை எடுத்துக் காட்ட உவமித்தார் எம்பிரான் சம்பந்தர். இதுவன்றி சிற்றம்பலத்துள் நின்றே திருநடனம் புரியப்படுவது. சித்து சக அம்பலம் சிற்றம்பலம் என வந்தது: உலகைப் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் விளையாடல் புரிவதே சித்தாகக் கருதப் பெறுதலின் சித்தம்பலம் ஆயது. உடலில் உயிரை இயங்கச் செய்யும் மூல இடம் அதுவேயாக அமைந்தது. இக் கூத்து மூலம் தான் உலகில் அருள் பெருகுவது. இக்கூத்தினைத் தரிசித்துப் போற்றுவார் பெறும் இன்பம் அது பேசரிய ஆனந்தம் ஆதலின் ஏத்தும் இன்பந்தான் இன்பம் எனப்பட்டது. ஏனைய உலக இன்பம் போல் தோற்றமும் முடிவும் இல்லாது நீள இந்த இன்பம் இருத்தலின் இன்பம் இன்பமே என அதன் முடிவின்மை அறிவிக்கப்பெற்றது. இந்த இன்பத்தை நாடும் அவர்க்கு நெஞ்சம் தூய்மைப் படல் வேண்டும. இதனைத் திருநாவுக்கரசர் நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமாறு நினைப்பியாதே வஞ்சம் செய்வாயோ என கூத்தரைக் கேட்கும் பொழுது இதன் அருமைப்பாடு எத்துணைச் சிறந்தது சிந்தியுங்கள். 4

**செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்**
**செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற**
**செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம் பெருகும் நெடிய மாடங்கள் மேல் மேல் அடுக்கு மாளிகைகளாக நிரம்பி உயரச் சென்று ஓங்கி நிற்ப அதன் மீது எழும் ஒளியில் செல்வம் தரும் நிலவுடைய இளம் பிறை தான் வந்து தோய; இன்னவகையால் அருட் (செல்வம் உயர்கின்ற செல்வராகும் அந்தணர் தமது தொண்டால் அருள் செல்வம் உயரப் பெற்று அதன் காரணத்தால் அவரைச் சிறப்பித்து போற்றுவார் பலரும் நல்நிலை அடையும்படியான) பெரும் அருள் செல்வர் வாழ்கின்ற தில்லைச் சிதம்பரத்து நின்று நடமாடும் பேரருள்தரும் செல்வன் சிவன் திருவடிகளைப் போற்றுகின்ற செல்வம் உண்மைச் செல்வமாகும்.

அங்குள்ள மாடங்களின் அமைப்பு செல்வத்தை குன்றாதபடி வருவித்தவாறு இருப்பது. வாழ்விற்கு தேள்வை உடைய அத்தனையும் வந்து பொலிவதாவது என்றதால் செல்வ நெடுமாடம் எனப்பட்டது. அவை உயர்ந்து நின்றன. அவற்றின் ஒளி இருளையும் வென்று நிற்பதால் வானில் செல்லும் இளம் பிறை அதன் ஒளியில் தோய்தல் போல இருப்தால் செல்வ மதி தோய எனப்பட்டது. மதி (பிறை) அங்குள்ள அருட் செல்வத்தில் தோய்ந்து தானும் அருள் பெற்றமையின் செல்வ மதிஎன்றூர். சந்திரன் தோயும் படி அருள் செல்வம் உயர்கின்றது என்றதால் செல்வம் உயர்கின்ற என்றூர். தில்லைச் சிதம்பரத்து வாழும் அந்தணர் தமது யாகாதி கருமங்களாலும் நல் ஒழுக்கம் தலை நிற்றலாலும் நான்கு வேதங்களையும் குருசீட முறையில் நன்கு ஓதி உணர்ந்து தெளிந்தமையாலும் அருளின் செல்வராயினர் என்றதால் செல்வம் உயர்கின்ற செல்வர் எனப்பட்டது.

உலகில் உள்ள மக்கள் பெறும் பொருட் செல்வத்தை இங்கு குறிப்பிடாது அருள் செல்வமே குறிப்பிடப்பட்டது. இவர்கள் சிவகணங்களாவார் என்பதும் நித்திய ஒளிப் பேற்றிற் குரியவர் என்றதாலும் மகத்துக்கள் எனவும் சொல்லப் பெறுவர். திருத்தொண்டத் தொகைக்கு மூல காரணராயவர். முட்டாத முச்சந்தி மூவாயிரவர் என திருநாவுக்கரசர் இவர்களின் யோக நெறிகளையும் சுவாமிக்கு செய்திடும்காலை உச்சி மாலை எனும்மூன்று கால வழிபாட்டையும் சிறப்பிக்கின்றனர்,

இவர்கள் தாம் செய்யும் ஓமச் சிறப்புக்களால் சிவமும் தாமும் இருமை அற்ற நிலையில் ஒன்ருகப் பெறும் பேறுடையவர். இதனை அருணகிரியார் ''ஓம் அங்கி உருவமாகி ஒரந்தம் மருவி' எனக் குறிப்பிடுகின்றூர் இது சம்பந்தர் காலத்து இருந்தநிலை குறிப்பிடப் படுகின்றது, இன்று இவை என் ஆவதோ நாம் அறிய வல்லமோ? எனவே தில்லைச் சிதம்பரத்தின் பெருமை தில்லைவாழ் அந்தணரது சீரிய அருட் செல்வம் பேணும் முறையால் எழுவது என்பதை இப்பதிகம் தெளிவு படுத்துகின்றமையின் செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே என்றூர். 5

**வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்**
**திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய**
**கருமான் உரியாடைக் கறைசேர் கண்டத்தெம்**
**பெருமான் கழல்அல்லாற் பேணு துள்ளமே.**

புதிதாகத் துளிர்த்து வருகின்ற மாந்தளிர் போலும் வனப்பால் சிறந்த திருமேனி உடைய உமையம்மை ஒருபாகமாக ஒன்றே இரண்டாகிய இருமையில் சிறந்து விளங்கி; ஊனும் உயிரும் ஒன்றும் படியான உருக்கத்தைத் தந்தருளும் திரு தெவிட்டாதபடி நிகழும் தில்லைச் சிதம்பரத்து சிற்றம் பலத்துள் நின்றூடியருளும் கரிய யானையின் தோல் ஆடையாகக் கொண்டு நஞ்சின் கறை உடைய கண்டமுடன் திகழ்ந்து காணப் பெறும் பெருமானது திருவடிகள் அல்லாது எனது உள்ளம் வேறு ஒரு பொருளைப் பேணுது.

அருள் சிறக்கும் சிவகாமி அம்மை ஒருபாகமாக அமைய தான் நின்றவாறு, அது ''மின் தொத்திடு கழல் நூபுரம் வெள்ளை செம்பட்டு மின்ன ஒன்று ஒத்திட உமையாளுடன் நின்றூடிய புலியூரர்' என மணிவாசகரும் அம்மையுடன் நின்றருளும் கோலம் பேசுகிறூர். மாந்தளிர் சிவப்பு கலந்த பசுமையாதலின் வருமாந்தளிர் மேனி எனப்பட்டது; இது திருநடனம் நேராகத் தரிசித்த வண்ணம் உணர்த்தப் பெற்றது: இது தரிசிப்பார்க்கு ஊனும் உயிரும் ஒன்றிய பேரின்பம் தலைப்படுவைத்தற்குரிய செல்வம் கொண்டதால் திருமாந்தில்லை எனப்பட்டது.

இந்தத் திரு வேறெங்கும் பெற முடியாமையில் தில்லைக்கே இதனை தனித்துக் கொடுத்து சிறப்பிக்கின்றூர். அஞ்சொலாள் காண நின்று அழக நீ ஆடுமாறே எனப் போற்றும் திருநாவுக்கரசரும் இத்திருக்கூத்துக்காண எவ்வாறு நான் இங்கு வந்தேன் எனத் தம்மையே வியந்து அதிசயிக்கின்றூர். 6

**அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்**
**மலையான் மகளோடு மகிழ்ந்தான் உலகேத்தச்**
**சிலையால் எயிலெய்தான் சிற்றம்பலந்தன்னைத்**
**தலையால் வணங்குவார் தலையா ஞர்களே.**

அலைத்து ஆடிடும் திரை உடைய கங்கையைச் சூடி தனது உடம்பில் ஒருபாகம் மலையரசன் புத்திரியான உமையம்மையுடன் சேரமகிழ்ந்தவன்; முப்புரத்து அசுரர் செய்த சொடுமை சகிக்க முடியாத வகை உலகம் போற்றும்படி முப்புரத்து அசுரர் கொடுமைக்கு உடந்தையாய் இருந்த மதில் மூன்றினையும் மேரு என்னும் வளையாத வில்லை வளைத்து எரித்து அழித்தவன்: அவனது தில்லைச் சிதம்பரத்தைத் தலைசாய்த்து வணங்கு வார்கள் தலையான நிலமை உடையார்கள். அன்றியும் தலையான பேற்றைப் பெறுவார்கள்.

மலையரசன் மகள் உமையுடன் ஒன்ருகி மகிழ்ந்தான்; அந்தமகிழ்ச்சி அவனை வணங்குவார் எவர்க்கும் மேலான பேற்றைத் தருவதாயது; அருள் வடிவான உமையை தனது ஒரு பாகமாக மகிழ்ந்தது பிறஉயிரின் நலன் கருதி என்றவாறு: முப்புரத்து அசுரர் செய்த கொடுமையை உலகம் சகிக்காது தவித்திட அவாக்காக முப்புரம் எரித்திட முயன்ற போது எல்லா உலகமும் இக்கருணையை நினைந்து போற்றின. அவன் சிற்றம் பலத்து நீங்காது உறைகின்றூன், ஆதலின் அவனது சிற்றம்பலத்தை தலையால் வணங்குவார் தலைப்பட்டார்கள். தலையனூர்கள் என்றது உலகியலில் பட்டம் பதவி பெருமை செல்வம் இவற்றூல் உயர்வது போலல்லாது பெருமை சிறுமை யாவும் கடந்த ஓர் தலைமைப் பாட்டைத் தாம் பெற்று உயர்வார் எனப்பட்டது.

**கூர்வாள் அரக்கன்றன் வலியைக் குறைவித்துச்**
**சீரா லேமல்கு சிற்றம் பலமேய**
**நீரார் சடையானை நித்த லேத்துவார்**
**தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே.**

கூரியவாள் கையில் கொண்ட இராவணனது வலியைக் குறைவித்து சீராலும் சிறப்பாலும் மிகுந்து விளங்கும் தில்லைச் சிதம்பரதுள் பொருந்தி நின்று ஆடியருளும் கங்கை நீர் பொருந்திய சடை உடைய கடவுளை நித்தலும் போற்று வார்கட்கு தீராத நோய் எல்லாம் தீர்த்தல் திடமான தொன்று.

இராவணனது வலியை அடக்கியது சிவன்கருணையைக் காட்டியவாறு: கொடியவனின் கொடுமையை நீக்கினல் பின்னர் அவன் நன்நெறிப் பட்டு உயர்வான் என்றவாறு: நீரார்ந்த சடையுடையது உலகைஅழிக்க வந்த கங்கையைச் சடையுள் வைத்தவாறு. தான் ஆக்கிய உலகில்வரும் துயரைத் தான் நீக்கிடல் அன்றி வேறு யாராலும் கூடாமையால் அது உணர்த்திடக் கங்கையைச் சடையுள் வைத்து காண்பித்தவாறு: இந்தப் பகவானை நித்தலும் பூவும் நீரும் கொண்டு போற்றுவார்க்குத் தீராத நோய் எல்லாம் தீரும் என்றவாறு: தீர்தல் எனப் பொதுப்படச் சொல்லாது அது திண்ணம் என்றூர். ஏத்துதல் தான் பெரிதாகச் சொல்லப்பட்டது. யாரும் நீங்கள் பூவும் நீரும் கொண்டு போற்றுமின் என்கின்றூர்: இதில் சந்தேகத்திற்கு இடமில்லை என்றபடி: 8

**கோணு கணையானுங் குளிர்ந்தா மரையானுங்**
**காணூர் கழலேத்தக் கனலாய் ஓங்கினுன்**
**சேணூர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்ஏத்த**
**மாணு நோயெல்லாம் வாளா மாயுமே.**

பாம்புகளில் தலையான ஆதிசேடன் மீது சயனித்து இருக்கும் திருமாலும் குளிர்ந்த தாமரைப் பூவில் இருக்கும் பிரமனும் ஆகிய இருகடவுளரும் காண முடியாதவர்; அவர் கண்டு உய்ந்திட திருவடி போற்றிடும்படி அவரது அகந்தை நீங்கிட நெருப்பாகி நிள நிமிர்ந்து நின்றவன்; சிவகணங்களாகும் அந்தணர் வாழும் அவனதுசிற்றம் பலத்தைப் போற்றிட எந்த விதமான வலி உடைய நோய் எல்லாம் தாமாக அழியும்.

பாம்புகளின் தலைவன் ஆதிசேடன். அதனை தன் சயனத்தில் அணையாகக் கொண்டவர் திருமால். அவரும் படைக்கும் கடவுளான பிரமனும் தம் பெருமை சாதிக்கப் போரிட்டவர்; அப் போர் பேதமையானது. உண்மைக்கு மாறு பட்டது என்பதால் உண்மை காணூர் எனப்பட்டது. உண்மை காண்பார் சிந்தித்தோ தேடியோ அறிய முடியாததால் கழலேத்திக் காண்பதன் அருமையை உணர்விக்க நெருப்பாய் ஓங்கினுன், அகந்தைஉடையாரைத் அடி முடி தேடவைத்து அலுக்க வைத்து களைக்க வைத்து அதன் தன்மையில் அவர் தன்னை உணரும்படி வைத்த தாதலின் ''காணூர் கழலேத்தக் கனலாய் ஓங்கினுன்'' எனப்பட்டது; சேணூர் என்றது தில்லையில் வாழும் அந்தணர் சிவகணங்களாவார் என்பது குறிப்பிடப்பட்டது; தில்லை வாழ் அந்தணர் சிவகணங்களாம் படி அருளால் திருஞானசம்பந்தர் கண்டு திருநில கண்டப் பாணர்க்கும் காட்டியமையால் சேணூர் என தில்லைவாழ் அந்தணரைச் சிறப்பித்தனர்; மாணுத நோய் என்றது மாருத எனவும் கொள்ளலாம்; வாளா மாயுமே என்றது மருந்தின்றி மாறும் என்றவாறு: 9

**பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்**
**மூட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே**
**சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே.**

மரப்பட்டையில் சாயம் ஊறவைத்துஅதில் தோய்த்த காவிஉடுப்பு உடுத்து தமது வடிவத்தை பிறர்கண்டு மெச்சி இவர் சாமி என்றுபோற்றும்படி வேடம் போட்டுக் கொண்டாடித் திரியும் முட்டைகள் போல உயர்விலார் உங்கட்கு செய்யும் உபதேசம் பிரசங்கம் கேளாது; பெரியோர் வாழும் தில்லைச் சிதம்பரத்து பொருந்தி நின்று ஆடுகின்ற முழுமுதற் பெருமானை நாளும் நாம் தொழுவோம்:

காவி உடுத்து சடைவைத்து நிற்பார் வேடம் கொண்டாடுபவர் என்றதால் பட்டைத் துவராடை படிமம் கொண்டாடும் முட்டைகள் என்றூர்: நமது தீபத்தில் சைவ நெறியில் வெள்ளையே அன்றி காவி இல்லயே இல்லை என முன்னர் தெரிவித்துள்ளோம்: காவி உடுத்தலின் நோக்கம் வேடம் கொண்டாடுவதாகும். தம்பிரான்கள் யாவராயினும் பரமாச்சாரியார் சுவாமிகள் யாவராயினும் படிமம் (வேடம்) கொண்டாடுபவரே ஒழிய வேறில்லை: இவர்களும் அடுத்து பட்டம் கொண்டாடுபவரும் ஒரு தன்மையான நிலை உள்ளவர்கள். இவர்களது பிரசங்கங்களை கேட்க வேண்டாம் என்று சம்பந்தர் சொல்கின்றூர். அவர் வாக்கு சமணரையும் புத்தரையும் குறிப்பதாயினும் புத்தர் வழியில் மடாதிபதியும் சிவத்தமிழ் வாரி பூரிபாபா வாப்பா செம்மல் கம்மல் கொண்டல் சுண்டல் எல்லாம் படிமம் கொண்டாடும் முட்டைகளாகும். இதனை எமது சைவ மக்கள் என்று உணர்வாரோ தெரியாது? முட்டை என்பது எந்நிலையிலும் நெறிப்படார் என்பதைக் குறித்தது; கோழி முட்டையை நிமிர்த்தியும் வைக்கலாமோ? அது முடியாது. இதே போன்று தான் அவர் பிரசங்கமும் உபதேசமும் நெறிப்படாது. இன்றுவரையிலும் காவி உடுத்த ஓர் மடாதிபதியின் உபதேசம் பெற்று உண்மை நிலை பெற்றூர் யாரும் உளர் என காட்டவல்லீரோ? இவரை பின்பற்றுவோர் கோயில் சொத்து திருடிகளாகவும் வஞ்சகராகவும் காடையராகவும் இருட்டுச்சந்தை வியாபாரிகளாகவும் உள்ளரேயன்றி இவர் சகவாசத்தில் நீதி உடையார் ஒருவரும் இல்லை எனலாம். 10

**ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்**
**சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய**
**சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை**
**கோலத் தாற்பாட வல்லார் நல்லரே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பூமியில் உயர்ந்த சீர்காழியில் வந்த திருஞானசம்பந்தன்; சீலம் விளங்குதலே மேலான கொள்கையாகக் கொண்ட அந்தணர்கள் அடியார்களது பெரும் கோயிலாய தில்லைச் சிதம்பரத்து இருந்தருளும் சூலப் படை உடைய கடவுளைச் சொன்ன தமிழ் மாலையான இப்பாடலை அருள் பெருகும் உள்ள முடைய கோலத்தால் பாட வல்லவர் நல்லவராவர்.

உயர் காழி என்றது அங்கு வாழ்வாரது தவ நெறியின் சிறப்பும் சீகாழி ஊழியிலும் அழியாது ஊழிக்கடல்மேல் உயர்ந்து நிற்றலாலும் சொல்லப் பட்டது. சிதம்பரத்தின் உயர்வு அந்தணர் அடியார்கள் சீலத்தால் பெற்றமையின் சீலத்தார் கொள்கை எனப்பட்டது. கோலத்தால் என்றது அகத்தூய்மை வலி உறுத்தப் பெற்றது. சிவன் அருள் பாடலை ஓதிடும் பொழுது உள்ளமும் புறத்து உடலும் தூய்மையாக இருத்தல் அவசியம். நீராடி நீறு அணிந்து காமாதி குணங்கள் குற்றங்கள் இலராகி நின்று இப்பாடலை ஓதுதல் முறையாகும் என்றதால் கோலத்தாற் பாடவல்லார் என்றதாகும். 11

# இன்று நாம்காணும் கலியின்செயலை முன்பு காட்டிய திருவாரூர்புராணம்.

**நம் நாட்டில் இன்று நிகழ்ந்து வரும் கலியின் விபரீத விளைவுகளை எப்பவோ உணர்ந்து உரைத்த மறைஞானசம்பந்தர். அவர் பாடிய திருவாரூர் புராணத்து சருவதீர்த்த யாத்திரைச் சருக்கத்து காணப்பெறும் பாடல்கள். சீலம் உடைய சைவநூல்கள் தெரிவிப்பன தவறுவதில்லை ஆனல் சைவமக்கள் பெரும்பாலார் நம் புராணங்களை மதிப்பதில்லை. பதில் சீலமிலாச் சினிமாக்காறரையும் பாடலையும் மதித்து சைவநெறிகளையும் சமய உண்மைகளையும் பாழாக்குகின்றனர்.**

கீழே தரப்படும் பாடல்களை உணர்ந்தால் கலி என்பது என் செய்யும் என்பது தெளிவாகும். இற்றைக்கு பல நூறு ஆண்டுகட்கு முன்பு மறைஞான சம்பந்தர் என்னும் முனிவர் திருவாரூர் புராணத்து சருவதீர்த்த யாத்திரைச் சருக்கத்து: இனிவரும் காலத்து கலியின் வேகம் நாட்டில் என்ன வகை பாதிக்கும் என்பதை பல பாடல் மூலம் சொல்லுகின்றார். அவற்றில் சில பாடலை நீங்கள் வாசித்து அறியும் பொருட்டு கீழே தருகின்றோம். இன்று நடக்கும் விபரீதச் செயல்களை அன்று அப்படியே படமிட்டு வைப்பார் போல சொல்லி உள்ளார்: இத்தகையதாக கலியின் செயல்கள் நிகழாத படி தமது ஓமங்களால் பாதுகாத்தனர் தில்லை வாழ் அந்தணர் என்றால் அவரின் அருட்பெருமை எப்படி இருந்திருக்கும் சிந்தியுங்கள். பாடல்களில் சொல்லிய அவ்வண்ணமே இன்று செயல்கள் நடைபெறவில்லையோ என்பதை எண்ணிப் பாருங்கள்.

## கலி காலத்தில் அந்தணர் செயல்கள்

அடுத்தவா சிரமந் தானு மாண்டவை யறிந்து நூலால்
முடித்திடார் கலியினாலே மூடராய் முடிப்ப ரிட்டம்
அடுத்தவா சிரம மூன்றுண் டவற்றினை விதியினாலே
முடித்திடார் வேந்தர் தாமு மூர்க்கராய் முடிப்ப ரிட்டம்,

பிராமணர்க்குரிய பிரமச்சாரியம் இல்லறம் வானப்பிரதம் சந்நியாசம் எனும் நான்கு ஆச்சிரமதர்மங்கள் அற்றுப்போம். இவற்றின் உண்மை விதிக்குரிய நூல்களை அறிந்து ஆகம நூல் விதிப்படி அந்தணர் தம் செயல் செய்யார். கலி மிகுதியால் (பொருள் அவா) மூடராகி தாம் நினைத்தவாறே வேதநெறிகளைச் செய்வர். அரசர்க்குச் சொல்லிய மூன்று ஆச்சிரமம் அவற்றை விதியினாலே செய்யாது தாம் மூர்க்கராகி அரசர் நீதிவழுவி தம்இட்டப்படி நடப்பர்.

அருமறை தனையு மோதார் அங்கமு முணரார் நாளும்
கருமமு மியற்று ரற்பஞ் செயவருங் காத லின்றி
இருநிதி யாசை யாலே யிறைமுறை யறவே கொள்வார்
உருகியே யுலக மோம்பா ருணர்விழந் தொறுப்பர் தாமும

அந்தணர்கள் அரிய வேதங்களையும் ஓதார்கள்: வேத அங்கங்களையும் உணரார்கள். நாளும் தாம் செய்ய வேண்டிய வேதக் கருமங்களையும் செய்யார்கள். சிலர் சிறிது செய்வாரும் அதில் விருப்பமின்றிச் செய்வார்கள். பெரும் பொருள் அவாஞ்சையாலே அரசரும் உலகத்தை மக்கள் நலன் கருத்திற் கொண்டு பேணாது பொருள் பறித்து தம் நல்உணர்வு இழந்து மக்களைத் துயர்பட வைத்து தாம்வாழ்வர்.

மன்னவர் கொடுங்கோ லாக மழைபொழி யாம லேதான்
அன்னமு மரிதே யாகி யாக்கையுமழிதல் கண்டே
பன்னியென் பயன்வே தங்கள் பரமனைப் பூசை பண்ணி
என்னகண் டனமிப் போதென் றிகழ்வரே யெவருநொந்தே,

அரசர்கள் கொடுங்கோலாகி பருவ மழை பொழியாது: நல் நெல் விளைச்சல் அரிதாகும். பட்டினியால் உடல்கள் இறக்கும். வேதங்களை ஓதி என்ன பிரயோசனம் என்பர். சிவனைப் பூசை பண்ணி என்ன பலன் கண்டோம் என பலரும் மனம் நொந்து இகழ்வார்கள்.

பொழிந்திடு மழைதா னிங்கே புரிந்திடின் மகமென் றெண்ணி
விழைந்துவே தியர்தம் மாலே வேள்யுஞ் செய்வி யார் தாம்
ஒழிந்தவர் தம்மை வேத விதியினை யுணர்ந்து நீக்கார்
ஒழிந்திலார் தம்மை வேத விதியினை யுணர்ந்தோம் பாரே.

யாகங்கள் முறைப்படி நடத்தப்பட்டால் மழை பொழியும் என்று அதனைச் உத்தமமான அந்தணராலே செய்வியார். வேதவிதிப்படி ஒழுக மாட்டாத பிராமணரை அக்குலத்தால் நீக்கார். வேதவிதியினை நீக்காது நல் நெறி ஒழுகும் பிராமணரை விரும்பி அவர்க்கு உதவி செய்து அவரை ஆதரிக்கார்.

பழித்துவை திகத்து நீதி பாஞ்சராத் திரமுஞ் சேர்வார்
ஒழித்தலால் வைதி கத்தை யுணர்வற மிரண்டுங் குன்றி
இழப்பரா மிருந்த தேசம் புலினர்வந் தெதிர்ந்த போது
வழக்கறி யாத வந்த மறவருக் கொளிப்பர் மற்றேன்.

வைதிக நெறிகளை இகழ்ந்து நீக்கி பாஞ்சராத்திர நெறியில் ஒழுகுவார். (பாஞ்சராத்திரம் என்பது புறச்சமயங்களில் ஒன்று) வைதிக நெறிகளை நீக்கலால் இவர்களது உணர்வு தருமம் இரண்டும் குன்றப் பெற்று அதனாலே தாம் இருந்த தேசத்தை இழப்பர். இத்தேசங்களில் வேதவழக்கம் நெறி அறியாத வேடர் போலும் மிலேச்சர் வந்து எதிர்த்தபோது அவர்கட்கு பயந்து மக்கள் ஒழிப்பர். அவரை எதிர்க்கும் சத்தியிலாது போவர்.

அவர்களுக் கெளிய ராகி யடைக்கல மென்று புக்கே
அவர்களைத் தொழுது பின்சென் றவரருள் பெற்று வாழ்வார்:
அவரிவர் தம்மை யெல்லா மடியாரைப் போலக் கண்டு
கவர்வரே யிவர்கள் பெற்ற கன்னியர் தமைக்கா முற்றே

எதிர்த்து வந்த வேற்று நாட்டாருக்கு எளியவராகி அவரை அடைக்கலம் எனப் புகுந்து; அவர்களைத் தொழுது பின் சென்று அவர் இரங்கிக் கொடுக்கும் தொழில் முதலியன பெற்று வாழ்வர். அவர்கள் இவர் போக்கை உணர்ந்து தமது ஏவலாளரைப் போல் இவரை வைத்து இவர்கள் பெற்ற கன்னிப் பெண்களை விரும்பி அப்பெண்களை தாம் எடுத்துச் சென்று கற்பழிப்பர்.

வேதியர் தாமும் மெல்ல மெல்லவே மறப்பர் வேதம்
ஓதுதல் செய்யார் மற்றை யங்கமு முணரா ருள்ளத்
தாதர வுறவே செய்யார் மகவினை யமரர்க் கெல்லாம்
சாதலும் பிறத்த ருனுந் தவிர்த்திடத் தவமுஞ் செய்யார்

அந்தணர்களும் மெல்ல மெல்ல வேதங்களை மறப்பர்: அதனை ஓதார்கள். இதுவன்றி மற்றைய வேத அங்கம் ஆறினையும் உணரார்கள். உள்ளத்து ஆதரவுடன் தம் யாகாதி கிரியைகளை தேவர்க்குச் செய்யார், சாதலும் பிறத்தலும் தவிர்த்திட தவமும் செய்யார்.

அகம்பரப் பிரம மென்னு மறிவினை யிழப்பர் மெல்ல
அகமிது செய்தே னெனபா ராட்டுவிப் பானைப் பாரார்
அகந்துவ மென்று ஞானம் விகற்பமென் றதனை நீக்கார்
அகந்தசை யுடலென் றெண்ணி யதுதனையலங்கரிப்பர்

உள்ளம் பிரம சொரூபம் என்னும் அறிவினை இழப்பார் அகம் பிரமம் என எண்ணிக் கருமம் செய்தலால் என்ன பலன் என்பார்கள். ஆட்டுவிக்கின்ற ஏகனைய கடவுளைப் பாரார். உள்ளமும் கடவுளும் வேறு என்னும் அறிவு பழுது என அதனை நீக்கார். நான் என்னும் உள்ளம் தசை உடைய உடல் என்று எண்ணி உடம்பினை நன்கு அலங்கரிப்பர்.

பொருணசை யாலே சென்று புல்லியர் வாய்த ரூறும்
இருமினென் றியம்பப் பெற்றே யிருந்தவ ரேவல் செய்தே
உருகியே யவரே தேனு முதவிய விதனை வாங்கி
அருவருப் பதுவு மின்றி யருந்துவர் நாண மற்றே.

பொருள் மேற் கொண்ட ஆசையாலே அற்ப அறிவுடைய மனிதர் (சிறுபான்மையினர்) இல்லம் தோறும் சென்று அவர் இருங்கள் என அங்கு இருந்து அவரது ஏவல் செய்து இவரிடம் அவர் கொண்ட இரக்கத்தால் கொடுக்கும் அப்பொருளை வாங்கி அருவருப்பின்றி உண்பர் சற்றேனும் நாணம் இல்லாதவராகி.

கற்பரே வேதந் தன்னைக் கனகமுங் கொடுத்துத் தானும்
விற்பரே நிதியை வேண்டி யோதிய வேதந் தன்னை
அற்புத மான தீர்த்த மாடியே யதன்ப லத்தை
விற்பரே நிதியை வேண்டி வேந்தர்க்கும் விழைந்த யார்க்கும்,

பொன்னைக் கொடுத்து வேதம் கற்பர். பொருள் வேண்டித் தாம் ஓதிய வேதத்தை விற்பர். அற்புதமான தீர்த்தங்களையாடி அதன் பலனை பொருளைப் பெறவிரும்பி அரசர்க்கும் பிறருக்கும் விற்பர்.

முந்திய வைதி கத்தை முனிவருங் கவுத மன்றான்
அந்தநா ளிட்ட சாபத் தறிவழிந் தரனைப் போற்றார்
நிந்தனை செய்வர் பஞ்ச ராத்திரந் தன்னி னிற்பர்
மந்தரே யாக வாம தந்திரம் புரிவர் வட்கார்.

முந்திய வைதீக கருமங்களை வெறுத்திடாத கௌதம முனிவன் அந்த நாள் இட்ட சாபத்தால் அறிவு அழிந்து சிவனைப் போற்றார்கள். நிந்தனை செய்வர். பஞ்சராத்திரம் என்னும் சமய நெறியில் நிற்பார். மந்த புத்தி உடையராக அந்தணர் வாம தந்திரம் என்னும் நெறிகளைச் செய்வர். ஆதி சைவனாக இருந்தும் இப்படிச் செய்திட வெட்கமடையார்.

கள்ளினை யுண்ண வெண்ணிக் கலப்பர்கா பாலர் தம்மைத்
தெள்ளிய திதுதா னென்றே வாகுளந் தனையுஞ் சேர்வர்
அள்ளலென் றுதே மெள்ள வாருக ராவர் போதி
வள்ளலே தெய்வ மென்பர் வனிதையர்க்காளு மாவர்

கள்ளுக் குடிப்பதை விரும்பி காபால சமய நெறிகளில் கலந்து நிற்பர். தெள்ளிய சமயம் என்று வாகுள சமயத்தைச் சேர்வார்: சமண சமயம் ஓர் சேறு என என்னுது அதனைச் சேர்வர். அரசமர நிழல் இருந்த புத்தனே கடவுள் என அச்சமயத்தைச் சேர்வர். பெண்கள் சொற்படி ஏவலும் செய்வர். (துர்க்கை கோவிலில் பெண்தலைவியின் சொற்படி அந்தணர் பெண்ஏவல்செய்வதை இப்பாடலில் காணலாம்.)

அறிவிலாத் தக்கன் செய்த வேள்வியி லன்று சென்று
மறுவறு முனித தீசன் வாக்கினுஞ் சபிக்கப் பட்டுப்
பிறிவற வுயிரு ணிற்கும் பிஞ்ஞகன் பாதம் பேணார்
பெறுவர் தாழ்ந் துபதேச சங்கள் சூத்திரர் பேசத் தாமே.

அறிவிலாத தக்கன் செய்த யாகத்தில் அன்று சென்று குற்றமற்ற முனிவன் ததீசியினுடைய வாக்கால் சாபமிடப்பெற்று; அதனாலே நீங்காது உயிருள் நிற்கின்ற சிவன் திருவடி பேணாது சூத்திரர் இடத்தாகத் தாழ்ந்து உபதேசம் பெறுவர்.

(மணிஐயர் என்பவர் நல்ல பிராமண குலத்தில் பிறந்து சிவ[illegible]யும் கொழும்பு பிரபலவியாபாரியாகும் சுந்தரம் என்[illegible] அதிபதியாகிட அவரிடம் சென்று அவர் காலில் தாழ்ந்து தனது மேலான நெறிக்குரிய பூணூலையும் அறுத்து எறிந்து உபதேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று இன்று ஓர் மடாதிபதியாகி திருஞான சம்பந்தர் வளர்த்த ஞான நெறியையே கெடுத்துக் கொண்டிருப்பது இச்செய்யுளில் சொன்னமைக்கு தக்க சான்று.

பாரியர் தம்மை விட்டுப் புணர்வரும் பரதா ரத்தைத்
தூரநில் லென்னப் பட்ட தோகையர் தோளுந் தோய்வர்
பாரியர் தாமும் விட்டுப் பதிபுயம் பயமு மற்றுச்
சோரநா யகன்றோட் சேர்வர் துறப்பருஞ் சிலர்தஞ் சுற்றம்.

பிராமணர் தமது மனைவியை விடுத்து வேறு மனிதனுடைய மனைவியைச் சேர்வர். வீட்டுக்கு விலக்கான பெண்ணையும் விலக்கிடாதுபிறர் விரும்பிச் சேர்வர். பிராமணருடைய மனைவியர் தன் கணவனை விட்டு பிற ஆடவருடன் சேர்வர். இச்செயலை தம் கணவர்க்கு பயப்படாது செய்வர். சிலர் தம் குலத்தை விட்டு பிற குலஆடவருடன்வாழ்வர்.

நாரியர்க் கினிய ராவர் நயிட்டிக விரதங் கொண்டார்
நாரியர் தாமு மந்த நயிட்டிகர்க் கினிய ராவர்
பாரியைத் துறந்தில் விட்டுத் தவம்பணும் பனவர் தாமும்
நாரியர் தோளைத் தோய்வர் நகுதலு நாணு ராயே.

பெண்கள் வசப்பட்டு அவர்க்கு இனியராகுவர் நைட்டிகமான (பிரமச்சரிய) விரதம் கொள்ளும் பிராமண இளைஞர். பிராமணக் கன்னிகைகளும் இந்த பிரமச்சாரிகளை விரும்பிக் கூடி அவர் பிரமச்சாரிய விரதத்தைக் கெடுப்பர். மனைவியை விட்டு தவம் செய்கிறேன் எனும் பிராமணர் வேறு பெண்களுடன் போகம் செய்வார். ஊர் மக்கள் இது கண்டு இகழ்வதற்கும் பயப்படார்.

கன்னிகை தன்னை விற்கை கரிசெனக் கழறு நூல்கள்
பன்னுவர் பரர்ககுஞ் சொல்வார் சொல்லியும் பணத்தை வாங்கிக்
கன்னிகை தன்னை விற்பர் கரிசினர்க் கொடுக்க மன்றிக்
கன்னிகை தானே தேடுங் கணவனைக் காதல் செய்தே.

பெண்ணை விற்பது சரியல்ல என்று சொல்லும் நூல்களைப் படிப்பர்; பிறர்க்கும் சொல்லுவர். ஆனல் தான் பணம் பெற்று கன்னிகையினை விற்பார். இதுவன்றி தனது தாய் தந்தை மாமன் மாமிக்கு அச்சம் ஒடுக்கம் இலாது ஓர் கணவனை கன்னிப்பெண் தானே தேடிக்கொள்வாள்;

அன்னமும் விற்பர் மெல்ல வபூபமும் விற்ப ராவின்
இன்னமிர் தினையும் விற்பா ரிரங்கியே யதனுக் கீயார்
புன்னயந் தீன்பால் வேண்டிச் சிலர்புரிந் தீய்வர் புல்லுங்
கன்னுவர் பூமி தன்னைக் கலப்பையும் பிடித்துக் கையால்.

பிராமணர் சோற்றுக் கடை வைத்து விற்பர். பலகாரங்களும் விற்பர். பசுவின் பால் வியாபாரஞ் செய்வர். ஆனல் பசுமீது இரங்கி திருப்தியான உணவு கொடார். சிலர் பால் கறக்கும் பசுவிடம் பாலுக்காக சில புல் போடுவார். புல்லையும் கிளறி எடுப்பர். சிலர் கலப்பை பிடித்து பூமியை உழுவார்.

தம்மையே புகழ்ந்து தக்கோர் தமையிகழ் திடுவர் சாற்றிப்
பொய்மையும்புறனுங் கோளும் புரவலர் புடையே போவர்
அம்மையிற் காத லார்போ லருச்சனை யாதி செய்வார்
இம்மையிற் பயனை யெண்ணி யாகமு மியற்று வாரே.

தம்மையே பெரிதாகப் புகழ்ந்து கொண்டு: தகுதி உடைய பெரியோரான தம் குலத்து பிராமணரை இகழ்ந்து கூறுவர், பொய்யும் சொல்லி புறமும் சொல்லி கோளும் சொல்லி மகிழ்வித்திட செல்வந்தரிடம் செல்வார்கள். (இது இன்று பெருமளவில் பிராமணர் செய்கின்றுர்) மறு உலக வாழ்வில் காதலுடையார் போல் அருச்சனை முதலிய செய்வர். தமக்கு வயதியான ஓர் பயனை நினைந்தே இவ்வுலகில் யாகம் செய்வர்.

சூத்திரர் தம்பாற் சென்று கருதியு மோது விப்பார்
பாத்திர மிவரென் றெண்ணிப் பதப்பொருள் பகவர் பாங்கால்
நாத்திகர் தம்மைச் சேவை பண்ணுவர் பொருளை நாடி
ஆத்திகர் தம்மைச் சேரா ரவர்தமக் கன்பு மற்றே.

சூத்திரரிடம் சென்று அவர்களை வேதம் ஓதச் செய்வர். இவர் தகுதி உடையவரென்று தகுதி இலார்க்கு மந்திர உபதேசம் செய்வார். கடவுள் நம்பிக்கையிலாதவரிடம் அன்பாகி அவரிடம் சென்று சேவை (உத்தியோகம்) செய்வர். கடவுட் கொள்கையில் உண்மை நிற்கும் அன்பரிடம் ஒருபோதும் இவர் அன்பு கொள்ளார்.

எழுதொணு வேதந் தன்னை யிதழினு மெழிதிக் கற்பர்
இழிகுலத் தினரைத் தீண்டி யிருப்பரே ஆதனத்தின்
வழுவிவர் மனையி லன்ன மென்றவ மதிசெய் யாதே
விழைவுற மிசைவர் மற்றும் வேண்டிய தெல்லாஞ் செய்வர்.

எழுத முடியாத வேதத்தை ஏட்டில் எழுதிக் கற்பர். இழிந்த குலத்தாரைத் தீண்டிக் கொண்டு ஒரே ஆசனத்து அவருடன் இருப்பர் தன சாதியில் வழுவின மக்களிடம் அன்னம் புசிக்கலாகாது என்பதை எண்ணுது அவர் சோறு நன்று என உண்ணுவர். இன்னும் கட்டுப்பாடில்லாது வேண்டியதெல்லாம் செய்வர்;

வேதத்தின் சார மான விமலனூல் காமி காதி
ஓதித்தா முணர்ந்து பாச மொருவியே யமலன் செம்பொற்
பாதத்தை யடையார் பத்தி முத்திவித் தென்னுர் பாதஞ்
சேதித்தார் திறங்கள் கேட்டுள் ளுருகுதல் சிறிதுஞ் செய்யார்.

வேதத்தின் சாரமான காமிகம் முதலான தெய்வ நூல்களை ஓதி தாம் உணர்ந்து பாசம் நீங்கி சிவனுடைய செம்பொன் பாததாமரையை அடையார். பத்திதான் முத்திக்கு வித்தாவது என்னுர். சிவனது அருட் பிரவாகம் உணர்ந்து வேதம் அருளிய நாயன்மார் சரிதம் கேட்டு உள்ளத்து உருகுதல் சிறிதும் செய்யார்.

பகைப்பருங் குரவ னேடு படித்தமா ணவர்க டாமும்
பகைப்பரு மரையன் றன்னை யமைச்சரும் பயமு மற்றே
யகைப்பரு மடியார் வெஞ்சொற் பகர்ந்துதன் பதியைப்பார்த்தே
பகைப்பரும் பாரி கொணட பாரகன் றனைப்பாங் கற்றே.

மாணுக்கர் தமக்குப் போதிக்கும் ஆசிரியருடன் பகைப்பர். மந்திரிகள் அரசர்க்கு பயமிலாது பகைப்பர். தொழிலாளர்கள் முதலாளியுடன் பகைப்பர் தன்னை ஏற்றுக் கொண்ட கணவனை மனைவிபாங்கிலா வகை பகைப்பாள்.

குலத்தினிற் பிறந்த பெண்ணுங் கொடியளாய்த் தனத்தைவாஞ்சித்
திலத்திருந் தொழுகா ணுணு மின்றித்தன் னிட்டஞ் செய்வாள்
குலத்தினு ளெய்யள் குறமங் கூறிடிற் றெல்லையு மோதாம்
இலத்திருந் தொழுகு வாருஞ் சிலர்பல மிட்டஞ் செய்வார்.

குலத்தில் பிறந்த பெண்ணும் கொடியவளாவாள். குலத்திற்குரிய ஒழுக்கம் இலாது காசை விரும்பி தன் இல்லத்து இருந்து பணிசெய்யாது நாணமும் இல்லாது தன் விருப்பப்படி தொழில் செய்வாள். இவள்தனது இல்லத்தை விட்டு வெளிச் சென்று தொழில் நிலையங்களில் தொழில் செய்திடும்வேளைஇவளிடம் பெருகும் குற்றங்களை நாம் சொன்னல் தொலையுமோ? வேலைக்கு செல்லாது வீட்டில் இருப்பார் சிலராக இருந்தும் அவரும் கட்டுப்பாடின்றிதம்விருப்பப்படி நடப்பார்,

மற்றைய வொருவ னேடு வாஞ்சையுற் றவனுந் தானும்
பற்றிந்தன் பதியைக் கையாற் பதைக்கவே வதைகள் செய்வார்
பற்றிமற் றெருவன் றன்னை யவனெடு மறைந்து போவள்
சுற்றமுந் துயர மெய்திப் பழியுறத் துரிசுக் கஞ்சாள்.

தன் கணவனல்லாத வேறு ஒருவனுடன் உறவை விரும்பி அதனுல் அவனும் தானுமாக வஞ்சனையால் தனது சொந்தக் கணவனை கையால் பிடித்து அவன் பதைபதைக்க கொன்றிடுவார். தனது கணவனையும் பெற்ற பிள்ளைகளையும் விடுத்து தனக்கு விரும்பிய வேறு ஆசைநாயகனுடன் ஒளித்து ஓடுவாள். இப்படித்தான் வேறொருவனுடன் ஓடலால் தன் சுற்றமும் பெற்ற பிள்ளைகளும் துயரம் எய்திப் பதைத்திட அப்பழிக்கு ஒருபோதும் அஞ்சமாட்டாள்.

(கோகிலாம் பாள் என்னும் பிராமணப் பெண் தன் கணவனைக் கொன்ற சரிதை இதற்கு தக்க சான்று, இத்துடன் கணவனையும் பிள்ளைகளையும் வெறுத்தோடிய சம்பவம் எத்தனையோ நிறைய உண்டு.)

தந்தைசொற் றனையர் கேளார்; தாயுரை தனையுங் கேளார்:
நிந்தனை செய்து நீதா னுரென நிகழ்த்து வாரும்
பைந்தொடிப் பவளச் செவ்வாய்ப் பாரியைப் பயந்தான்றன்னை
வந்தனை செய்து செல்வர் வாயுரை வழியின் மாறுர்.

தந்தையின் சொல்லைப் பிள்ளைகள் கேளார்கள்; தாய் சொல்லும் வார்த்தையையும் கேளார்கள். தாய் தந்தையர் சொல்லை நிந்தித்து நீ ஆர் எங்கட்கு புத்தி சொல்ல என்பாரும் தனது மனைவியின் தகப்பனை வந்தனைசெய்து மரியாதை செய்வர். செல்வர்சொற்படி ஒழுகி நிற்பர்.

பாரிக்குப் பயந்து வேண்டும் பரற்குப காரம் பண்ணுர்
பாரிசொற் பழுதென் னுது பயனெனப் பற்றித் தாயைத்
தூரப்போ வென்று சொல்வர் துறப்பதுஞ் செய்வர் மற்றுர்
சேரத்தான் வல்லா ருண்டோ புலியுறுந் தூறு சேர்வார்.

தன் மனைவிக்குப் பயந்து தனக்கு வேண்டிய நீதி உடைய ஒருவர்க்கு உபகாரம் பண்ண மாட்டார், தனது மனைவி சொற்படி ஒழுகுதல் பழுது என்னுது மனைவி சொல்லை ஏற்று பெற்றெடுத்த தாயை உனக்கு இங்கு அலுவல் இல்லை என தாயின் கையைப் பிடித்து நீ வெளியால் போ என்று சொல்வார்கள். தாயை பிரிந்து வாழ்வார்கள். இவர்கள் இன்னிலையில் இருப்பதால் வேறு தாய் தந்தை சுற்றம் இவரிடம் போகலாமா? இவரிடம் போவது புலி இருந்த குகைக்குள் சென்றதை ஒக்கும்.

உருகியே யன்பி னலே யுகந்துபெற் றெடுத்த தாயை
வெருவவே நோக்கிக் கையாற் றீண்டியு மடிப்பர் மெய்யின்
மருவலர் போலக் கோபத் தவளையும் வதைப்பார் மற்றென்
ஒருவரு மில்லா வில்லி னுழிப்பர்தம் முடலுந் தாமே.

உள்ளம் உருகி அன்பால் மகிழும் பெற்றெடுத்த தாயை அவர் பயந்திடும் படி கொடும் பார்வை பார்த்து கையால் தொட்டு அடிப்பார்கள். உண்மையான பகைவர் போல தாயை வதைப்பார்கள். இதுவன்றி ஒருவரும் இல்லாத வீட்டில் நஞ்சருந்தி தற்கொலை செய்வார்.

அற்றிலர் மண்ணி னுசை யரிவையர் தம்பா லார்வம்
மற்றைய மகவின் வாஞ்சை மாநிதி யாவும் மற்றும்
பற்றறுப் பார்போன் மெய்யிற் பரித்துச்சை வர்தஞ் சின்னம்
கற்பருங் கொண்ட கோலத் திசையியல் கபட ராயே.

மண் ஆசை அற்றிடாது பெண் ஆசை அற்றிடாது பிள்ளைகளில் ஆசை அற்றிடாது பெரும் செல்வத்தில் ஆசை அற்றிடாது; ஆனல் பற்றினை நீக்கிய மகான்கள் போல தம் மேனியில் கோலங்காட்டி சைவ சின்னங்களுடன் காணப்படுவர். பலர் இந்த வடிவில் நின்று இயல் இசை போதிப்பர் பாடுவர்; ஆனல் தம் வேடநெறிக்குரிய நிலையிலாத கபடராயே இருப்பர்.

(திருமுருக கிருபானந்த வாரியார் முதல் பல பிரசங்கியளும் சீர்காழி கோவிந்தராஜன் முதல் பல பாடகரும் இதற்கு சான்று. சைவ வேடம் தாங்கி பிரசங்கம் செய்வார் பாடுவார் மண் ஆசை பெண்ணுசை பொன்னுசை முதல் எல்லா ஆசையும் அற்றவராக இருத்தல் வேண்டும் என்பது இப்பாடல் குறிப்பு.)

தெருண்டில ரேனுந் தம்மைத் தெருண்டவ ரென்னத் தேற்றி
மருண்டவர் வம்மின் தீர்க்க மயக்கினை யென்றுந் தம்பால்
திரண்டவர் பொருளும் வாங்கித் தெருட்டினர் பொய்ந்நூல் செப்பி
உருண்டுகி ழோடு மூனர் பலர்சிலரி ருந்துய் வாரும்.

உண்மை உணராதவராகியும் தாம் உண்மை உணர்ந்தவர் போல் உலகை பேச்சால் மயக்கி; மயக்கமுடையீர் வாருங்கள் உம் மயக்கத்தைத் தீர்க்க என்று கூறி அவ்வகை தம்மிடம் திரண்டு வருகின்ற மக்களிடம் பொருளும் பெற்று தெளிவு விளக்கம் தருவார் போல் பொய்யைச் சொல்லி தலை கீழாக சமய நெறிகளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிப் பேசும் பொய்யரான சுவாமிகள் இருந்து தம் பிழைப்பை நடத்துவார்கள்.

வெல்வரே கற்றோர் தம்மை மெல்லவே கல்லார் புல்லர்
வெல்வரே வழக்கி லாதார் வழக்குளார் தமைவெ குண்டே
வெல்லுமே மெல்ல மெல்ல மெய்யினைப் பொய்மை தானும்
வெல்லுமே தருமந் தன்னை மெல்லவே மிக்க பாவம்.

கற்றோர்களை மெல்லவாக கல்லாதவரும் அற்பரும் வாதில் வெல்வார்கள். நீதியான வழக்குடையாரை நீதியிலா வழக்குடையவர் கோபமுடன் வெல்வர். மெல்ல மெல்ல உண்மையை பொய் வெல்லும்; (உண்மை சொல்வாரை உலகம் நம்பாது பொய்யரை உலகம் நம்பும்.) தருமத்தை மிக்க பாவம் வெல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லினி லலக்கக் கள்வ ரரையரும் பகலலக்க
ஒல்கியே வாடி வாடி யுறுவரே துயர முள்ளும்
பல்கியே யெறும்பு பாம்பு பாரிடை மூடி காதி
இல்லினு மவியத் துன்ப மிவற்றினு முறுவர் யாரும்.

இரவில் கள்ளர் தொல்லை பெருமளவு உண்டு. பகலில் அரசர்களால் துன்பம் பெருகும். இந்தவகை இரவும்பகலும் வாடி வாடித் தளர்ந்து துயரப்படுவார்கள். விதம்விதமான எறும்புகள் பாம்புகள் எலிகள் இவை வீட்டில் பெருகிட மக்கள் இவற்ருல் துயருறுவர்.

வான்மழை யருக்கிப் பெய்யு மண்டல வளமுங் குன்றும்
ஆன்முலைப் பாலுங் குன்று மாட்டினுக் கதிக மாம்பால்
மான்மட நோக்கி ஞர்தம் மலைமுலைப் பாலு மல்கும்
கான் மரக் கனிக ளல்குங் கண்டக மரங்கள் பல்கும்.

வானில் மழை குறைவாகப் பெய்யும்: மண்டலத்தின் வளங்களும் குன்றும். பசுப்பால் குறையும். ஆட்டிடம் அதிக பால் வரும். பெண்களது தனங்களில் பெறும் பாலும் அரிதாகும். இனிய கனிமரங்கள் (மா முதலியன) காய்ப்பது குறையும்; காட்டு மரங்கள் பெருகி வளரும்.

உழுதுவித் தாதே மற்றை யுகந்தொறும் பயிர்க ளோங்கும்
உழுதுவித் திடினே யிந்தக் கலிதனிற் பயிர்க ளோங்கும்
புழுவரிப் பனவு முண்டு புல்லிய பயிரே மல்கும்
வழுவிடும் விளைவுங் குன்றும் வாழையின் வளமற் றெல்லாம்.

உழுது விதையாது மற்றைய யுகங்களில் பயிர்கள் ஓங்கும். கலியுகத்தில் உழுது விதைத்தால் மட்டும் பயிர்கள் ஓங்கிவளரும். இந்த நெற்பயிர்களை புதுமாதிரிப் புழுக்கள் அரிப்பனவும் உண்டு. பசளி முதலிய கீழ்மையான செடிகள் வளரும். நெல் விளைவு தவறிடும். வாழைகள் எல்லாம் குன்றி ருருக்குத்தியாகி வளம் அற்றுப்போம்.

முற்றிய கலியி னீனர் முற்றியே முறைமை யின்றி
மற்றையர் தம்மை யெல்லாம் வருத்துவர் புகுந்து கோயில்
பற்றவர் தேவர் பண்டம் பருகுவர் பாவந் தன்னை
எற்றிடுந் தீர்த்தந் தீண்டிக் குளிப்பது மென்னச் செய்யார்.

கலிகாலம் முற்றிட ஈனசாதிமக்கள் (காடையர் காவாலிகள்) பெருகிக் கொள்வர். இவர்கள் யாரும் கேட்பாரிலாத முறமையிலாச் செய்கைகளால் மற்றைய மக்கள் யாரையும் வருத்துவர். கோயில் உட்புகுந்து கடவுளின் சொத்துக்களை களவெடுப்பர், சுவாமிக்கு வைத்திடும் பண்டங்கள் பால் முநலியன தாம் உண்பர். பாவத்தை நீக்கிடும் தீர்த்தங்களில் சென்று தாழ்ந்து தீர்த்தமாடல் ஓர் நற்கருமம் என எண்ணர்.

# திருக்கேதீச்சரம் பதில் தந்துள்ளது.

சென்ற 8-6-79 என திகதி யிட்ட 13 வது சுடரில் 6ம்பக்கத்தில் கோவிலில் ஆங்கிலத்தில் கட்டளை என்ற தலைப்புடைய செய்தியில் திருக்கேதீச்ரம் பதில் அளித்தல் நன்று எனக் குறிப்பிட்டிருந்தோம் மல்லவா. அதன்படி திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை தமது பதிலை அனுப்பி உள்ளது. அதனை நேயர்கள் அறியும் படி இதன் கீழ் தருகின்ருேம்.

## திருக்கேதீச்சுவர ஆலயத் திருப்பணிச்சபை

''தொண்டர் நாள் தொறுந் துதிசெய அருள் செய்
கேதீச்சர மதுதானே''

திரு. வை. நல்லையா அவர்கள்,
சந்திரதீபம் ஆசிரியர்,
கொக்குவில் மேற்கு கொக்குவில்.

**சிவ நாம பஜனை**

திருவைந்தெழுத்து ஐந்துவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன;—

(1) ஸ்தூல பஞ்சாட்சரம் — நமசிவாய
(2) சூக்கும பஞ்சாட்சரம் — சிவாயநம
(3) காரண பஞ்சாட்சரம் — சிவாயசிவ
(4) மகா காரண பஞ்சாட்சரம் —சிவ
(5) மகாமனு —சி

இவை பக்குவம் பெற்றவர்கள் குருவருள் நின்று உணர்ந்து மனத்தில் உள் அனுபவிக்கத் தக்கனவாகும். ஸ்தூல பஞ்சாட்சரம் இம்மை இன்பம் பெறவேண்டு வோர்க்குரியது என்றும் சூக்கும பஞ்சாட்சரம் வீடுபேறு வேண்டு வோர்க்குரியது என்றும் ஞானநூல்கள் கூறுகின்றன.

''மாலார் திரோதமலமுதலா மாறுமோ
மேலாசு மீளாவிடின்''
''சிவமுதலேயாமாறு சேருமேற்றீரும்
பவமிது நீயோதும் படி''
எனவரும் திருவருட்பயன் காண்க.

திருவைந்தெழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்து நிற்பதாகும். சிகரம் சிவத்தையும் வகரம் அருளையும் யகரம் உயிரையும் நகரம் மறைப்பையும் (திரோதமலம்) மகரம் ஆணவ மலத்தையும் குறிக்கும் எனவே இத்திருவைந்தெழுத்தில் உயிர் (ய) இடையில் நிற்கின்றது. ஒருமருங்கில் சிவமும் பிறிதொரு மருங்கில் மலமும் நிற்க இவ்வுயிர் தான் சார்ந்ததன் வயப்பட்டு நிற்கும் தன்மை அறியத்தக்கதாகும்.

''ஊனநடன மொருபா லொருபாலாம்
ஞானநடந்தானடுவே நாடு'

எனவரும் திருவருட்பயன் இவ்வுண்மையை விளக்கி உயிர் சாரவேண்டிய பொருள் எது என்பதையும் குறிப்பாக அறிவுறுத்துகின்றது. குருவருள் வழிநின்று இவ்வுண்மையை உணர்ந்து மனத்தில் உன்னிப்போர் சிவமாம் பெருவாழ்வை யடைவர். மலம் நீங்கிய பின் ஆன்மா ஞான நடனத்தில் மாத்திரம் நிற்கும். அந்த நிலையை விளக்கும் பஞ்சாட்சரம் மூன்றெழுத் தாலாயது.

கருவூர்த்தேவர் திருவைந்தெழுத்தின் சொற்பதத்தை உள் வைத்து உள்ளம் அள்ளூறும் தொண்டருக்குஎண்திசைக் கனகம், பற்பதக்குவை, பைம்பொன்மாளிகை, பவளவாயவர் இன்பம், கற்பகப் பொழில் ஆகிய அனைத்தும் கிடைக்கும் என்கின்றனர்.

''அற்புதத்தெய்வம் இதனின் மற்றுண்டே
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்துள்வைத் துள்ளம் அள்ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக்குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரந்தானே'

எனவரும் கங்கை கொண்டசோளேச்சரப் பதிகம் காண்க.

திருவைந்தெழுத்தை ஒளித்தலிலும் மனத்தால் உன்னுதலே தக்கதாகும். சிவாயநம வென்று சிந்தித் திருப்போர்க்கபாய மொருநாளுமில்லை என்பது ஔவையார் திருவாக்கு இன்னும்.

சிவ சிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவ சிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவ சிவ வாயதெளிவி னுள்ளார்கள்
சிவ சிவ வாகுந் திருவருளாமே''

எனவரும் திருமந்திரம் இவ்வுண்மையை விளக்கும். இவற்றை தங்கள் துறவிகளுக்கு எடுத்துச் சொல்லும்படி பணிவன்புடன் வேண்டுகின்ருேம்.

நன்றி

இங்கனம்
இ. நமசிவாயம்
கௌரவ செயலாளர்.

# முத்துவிநயகதொண்டர் வேண்டுதல்

கொழும்பு முத்து விநாயகப் பெருமான் தொண்டர் ஒருவர் கோவில் நிர்வாகத்தின் நடைமுறைபற்றிய தம் வேதனையை கீழே தரப்பட்ட கடித மூலம் தெரிவிக்கின்ருர். இவருடைய கவலையை உணர்ந்து நிர்வாகம் ஆவன செய்வதுடன் அங்கு வேத ஆகம முறைப்படி கருமங்களை நடத்தி சைவ நெறியில் புனிதத்தையும் புண்ணியத்தையும் பெருக வழி செய்யுமென நம்புகின்ருேம்.

ஆசிரியர் சந்திரதீபம்.
அன்பார்ந்த ஐயா!

அண்மையில் கொழும்பு செட்டித் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி கோவிலில் மாக கும்பாபிஷேகம் நடை பெற்றது. எக்கோவிலும் மகா கும்பாபிஷேகம் நடநதால் அதை தொடர்ந்து அடுத்த 44 நாட்களுக்கு விஷே அபிஷேகங்களும் பூசைகளும் நடாத்தி 45ம் நாள் மங்களாபிஷேகமும் திருவிழாவுடனும் நடப்பதை நான் அறிவேன். இவ் 45 நாள் நியமிக்கப்பட்ட அபிஷேகங்கள் திருவிழாக்களை தவிர்ந்தோ சுருக்கியோ இவ் 45 நாட்களுக்குள் வருடாந்த 10 நாள் திருவிழாக்களை நடத்தலாமா? எந்த சந்தர்ப்பங்களில் இவ் 45 அபிஷேக திருவிழா முறைகளை சுருக்கலாம் விலக்கலாம் என்பதை உங்கள் பத்திரிகை மூலம் வாசகர் யாபேரும் விளங்கினுல் மிக நன்று,

முக்து விநாயகருக்கு மிகப் பெரிய வருமானம உண்டு. வீடுகள் கடைகள் கிட்டங்கிகள் தியேட்டர் தோட்டம் என சொத்துக்களும் உண்டு. உண்டியல் அர்ச்சனை நன்கொடை தேங்காய் போனற வருமானங்கள் உண்டு. இருந்தும் திருத்தங்களுக்கு தர்மகர்த்தாக்களில் இருவர் கண்ட கடையாக சென்று வழிபடுவோரின் பண உதவி பெற்றுத்திரிகின்றனர். இவ்வுதவிகள் லட்சரூபாக்களாக அமைந்த படியால் வரவு செலவு கணக்குகள் பரிசோதிக்கப்பட்டு அச்சிட்டு, பிரசுரிப்பது தர்மகர்த்தாக்கள் கடமையாகும். இது போலவே வருடாந்தக் கணக்குகளையும் பரிசோதித்து இத் தர்மகர்த் தாக்கள் வருஷா வருஷம் பிரசுரிப்பது அவர்கள் கடமையாகும். இக்கணக்குகளை முறைப்படி பிரசுரிக்க வற்புறுத்தியான ஒரு வித நீதி இப்போ இல்லை! முத்து விநாகர் தொண்டர் இவ் நீதியை கெதியில் உருவாக்க வேண்டும். இதில் சைவ சமயம் ஆற்றல் உள்ளோர் மிக ஊக்கமாக முயற்சிக்க வேண்டும். ஆசிரியராகிய நீங்களும் இதற்கு வேண்டிய சுறு சுறுப்பு கொடுக்க வேண்டும. உங்கள் பத்திரிகை மூலம் எமது மந்திரி திருவாளர் செ-இராசதுரைக்கும் இவ்விடயத்தை தெரிவிக்கவிரும்புகிறேன்.

முத்து விநாயகர்- தொண்டன்

# கோவிலில் நடைபெறும் நகைச்சுவைகேளிக்கை

இன்று பல கோவில்களில் வில் இசை என்னும் எம் மேன்மையுடைய சைவநெறிக்கு மிகவும் அநாகரீகமான ஒரு செயல் நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் இந்தச் செயல்களை இரவில் திருவிழாவில் இடம்பெற வைக்கின்றர். பெருமளவு இச்செயலைச் செய்விப்பவர் கோவிலை ஒரு நாளாதல் வலம் வந்து பயபத்திபுடன் கும்பிடாதவரே செய்கின்றனர். இந்த வில்இசையில் பேசப்படும் நகைச்சுவை பெண்களைப் பாதிப்பதும் நிந்திப்பதுமாகவே உள்ளது என இதைக் கேட்ட பலர் கவலை தெரிவிக்கின்றனர்.

இறைவன் சந்நிதியில் இப்படியான செயல்கள் இன்னம் இன்னம் தமிழரது நற்பண்பைக் கெடுத்து கொலை களவு கள் காமம் பெரியோர் நிந்தை எனும் பஞ்சமா பாதகங்களை பெருக்கும் என வேத ஆகமங்கள் வலிஉறுத்துவதையும் நம் சைவமக்கள் கொஞ்சமும் எண்ணிப் பார்க்கின்றனர் இல்லை. தமிழினம் இவ்வளவு அல்லல்பாட்டை அனுபவித்தும் தனது புன்மையான செயல்களை இன்னமும் செய்து வருவது வருந்தத்தக்கது. எம் தமிழ் மக்கள் இந்த அநியாயச் செயல்களை நீக்கினுல் நம் கோயில்கள் நன்மை அடையும் தவம் ஓங்கும் தமிழினம் வாழும் என்பதைக் குறிப்பிடுகின்ருேம்.

இத்தகைய தான வில்இசை நிகழ்சியால் நகைச் சுவையால் பெண்களையும் பெரியோரையும் இழுத்து வேடிக்கை பேசுவது சைவக் கோவிலில் அன்றி வேறு எந்த கோவிலில் நடைபெறுவது எனக்காட்டுவீரோ. இப்படியான பாவச்செயல் தாவடி முருகமூர்த்தி கோவிலில் நடந்தது.

---

இப்பத்திரிகை கொக்குவில் மேறகில் இருக்கும் கந்தபுராண பெரிய புராண உரை ஆசிரியர் வை. நல்லையா அவர்களால் இலங்கை மணி சைவ நூற்பதிப் பகத்தில் பதிப்பிக்கப் பெற்று வெளியிடப் பெற்றது.

இப்பத்திரிகையைப் பெற விரும்பு வோர் சந்திர தீபம் கொக்குவில் என்ற விலாசத்தில் பெறலாம். வருட சந்தா ரூபா 16— ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமாலையும் புகழ்மாலையும் பொய்மைக்கோ? பெண்பேச்சின் இனிமைக்கோ?

## பேச்சு இனிமையானால் பொது மட்கட்கு பிடித்தமாகும்! அந்த இனிமையால் நடைபெற்ற உண்மை சம்பவங்களையும் நடைபெறவில்லை என நன்மை தீமை அறியாத பொதுமக்களை ஏமாற்றலாம். அரசியலில் இது நடைபெற்றாலும் பாதகமில்லை கோயிலிலா இது நடப்பது?

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் சில அருளின் சிறப்பிலாத செயல்களை நமது சைவ நெறியின் உயர்விற்கு உகந்தவையல்ல என நாம் நம் தீபத்தில் சுட்டிக் காண்பித்தோம். நம்செய்தியாவும்பொய் அப்படி நடை பெறவில்லை என சிவத்தமிழ் என்னும் பட்டம் பெற்ற பெண் ஒன்று கோயிலில் தம் பேச்சில் வெளிப்படுத்தியது சந்திரதீபம் பொய் அதை வாசித்தலும் பழி என்று பேச்சுடன் பேச்சாக சொன்னது. என அறிந்து வேதனைப் பட்டோம். துர்க்கை அம்மன் கோயில் சந்நிதியில் நாம் காட்டிய அருள் இல்லாத செயல்கள் நடைபெறவில்லையோ என்பதை அவ்வூர் மக்கள் துர்க்கை அம்மன் கோவில் தாமகர்த்தாச் சபைக்கு 1978-ம் ஆண்டில் கோயில் முறைகேடுகள்பற்றி விண்ணப்பித்துக்கொண்ட கடிதத்தினில் சுட்டிக் காண்பிக்கப் பட்டுள்ளது. இதன் புகைப்பட நிழல் பிரதி ஒன்றினை கீழே காணுகின்றீர்கள்.

அக்கடிதத்தில் நாம் குறிப்பிட்ட மேன்மையிலாச் செய்கைகள் மட்டுமன்றி வேறு வேறு செயல்களும் நடைபெற்றதாகச் சொல்லப் படுகிறது. நமது கோயில்கள் பாதிரிவேதச் சேர்ச் போல் மேடைப் பேச்சுடன் வழிபாடு நடைபெறுவன அல்ல. நாயன் மார் காலம் தொட்டு நம் கோயில்கள் அகிம்சை தவம் தருமம் கரவின்மை இரக்கம் தியானம் பாவனை என்ற சிறந்த செயல்களாக ஓங்கி இருந்தன. நாயன்மாரது தேவாரங்களையும் அன்றி பன்னிரண்டு திருமுறைகளையும் ஓதி உணர்வார்க்கு இது புலப்படும். தேவாரம் திருமுறை என்றால் என்ன என்று தெரியாத மக்கள் முன்னிலையில் நாம் சொல்வன ஏற்கப்படாவிட்டாலும் உண்மை என்றும் உண்மையே. உண்மையைப் பொய்யாக்க எவராலும் முடியாது. என்றோ ஒரு நாள் எல்லாம் விளங்கும்! நாயன்மார் காட்டிய அறநெறிகள் நம் கோவில்களில் விளங்கினால் நல்லது என்பதே தீபத்தின் என்றுமுள்ள கருத்து! இதைவிடுத்து பாதிரி வேத சேர்ச்சைப் போல் நம் கோவிலைப் பாவிப்பதென்றால் அது எமது நாயன்மார் வளர்த்து வைத்த சைவநெறியை அழித்தொழிக்கும் செயலாகும் இங்கு குறிப்பிட்ட கடிதம் இதுவாகும்.

உ

அம்பாள் துணை

தெல்லிப்பழை,
20 10 1978

கௌரவ தலைவர் அவர்கள்
தர்மகத்தா சபை
துர்க்காதேவி ஆலயம்
தெல்லிப்பழை

அன்புடையீர்!

எமது ஈழவள நாட்டில் துர்க்காதேவியை மூல மூர்த்தியாகக் கொண்டதும் மிகவும் பழமை வாய்ந்ததும் எல்லோராலும் போற்றி வழிபட்டு வரும் எம்மூர் ஆலயம் 1965 ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது, பின்னர் 1968ல் கொடிஸ்தம்பம் ஸ்தாபித்து மகோற்சவம் நடைபெற்று வருவது போற்றுதற்குரிய அருட்செயலாகும். அன்றியும் அன்னை துர்க்காதேவியின் அருட் கருணையால் திருப்பணி வேலைகளும் தீவிரமாக நடைபெற்று வருவது பார்ப்போர் மனமகிழ்ச்சி அடையச் செய்கிறது.

எனினும் சமீபகாலத்தில் நிகழ்ந்து வரும் அசம்பாவிதங்கள் இலங்கை வாழ்மக்களின் வாழ்வில் அச்சத்தையும் மனக்கிலேசத்தையும் உண்டு பண்ணிக்கொண்டே வருவதைப் பலரும் அறிவர். ஆகவே இவ்வசம்பாவிதங்கள் ஏற்படுவதற்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்து ஆக வேண்டிய பிராயச்சித்தங்களை முறைப்படி செய்வித்து சைவ உலகத்தை சுபீட்சமாக வாழவைப்பது உங்களது தலையாய கடன் என்பதை மிகுந்த பணிவன்புடன் அறியத்தருகின்றோம்.

நாம் அறிந்த சில அசம்பாவிதங்களையும் முறைகேடுகளையும் தங்கள் கவனத்திற்கு கீழே குறிப்பிடுகின்றோம்.

1. கஜலக்சுமியின் பிரதிட்டை அன்று மூல மூர்த்திக்கு அபிடேகஞ் செய்வதற்காகப் பிரதான கும்பம் உட்பிரகாரம் சுற்றி வந்து நிருத்த மண்டப வாயிலை அடைந்ததும் அங்கு கட்டப்பட்டிருந்த வாழைக்குலை ஒன்று முறிந்தது. இது ஓர் அபசகுனமாகும்.

2. 1977ம் ஆண்டு துவஜாரோகணத்தின் போது கொடிச் சீலை மேலே ஏறும்போது சிக்கலேற்பட்டதுமன்றி ஸ்தம்பத்தில் நான்கு சுற்றுக்கள் பொருந்தக் கூடியதாக அமைந்திருந்ததை அநேகர் கண்டு அச்சங் கொண்டனர். இவற்றின் விளைவாகவோ என்னவோ நாட்டின் முக்கியமாக தமிழ் மக்கள் கொலை, கொள்ளை, அவமானம் முதலிய பல இன்னல்களுக்குள்ளாயினர். அன்றியும் மேற்படி ஆலய நிர்வாக சபைத் தலைவர் உட்பட மகோற்சவ உபயகாரர் சிலரும் சமீப காலத்தில் இவ்வுலக வாழ்வை நீக்கவும் ஏற்பட்டது.

3. ஆலய அமைப்பில் அண்மையில் செய்யப்பட்ட சில மாற்றங்களும் சுற்றுப் பிரகார மூர்த்திகள் சில பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்தானங்களும் ஒரு சிலர் கருத்துக்களும் ஒவ்வாதனவாகக் கருதப் படுகிறது.

4. இரத வெள்ளோட்டத்தன்று இரதத்தை இடை நிறுத்தி ஆசாரியாரைக் கீழ் இறக்கி கௌரவித்துப் பின் இரதத்தில் ஏற்றி வீதி வலம் வந்தது ஒரு குற்றச் செயலாகும். அன்றியும் முதற்கண கௌரவிக்கப்பட வேண்டிய ஆலய பிரதம குருவுக்கு மூன்றுவதாக பொன்னாடை போர்த்தியது குருநிந்தையாகும்.

இரத உற்சவத்தினத்தன்று பாரம்பரியத்தை விடுத்து ஒருபக்க வடத்தைக் கன்னியரைக் கொண்டு இழுப்பித்த போது இரதத்தில் பொருத்தப்பட்டிருந்த மணிகள் சில உடைந்து விழுந்ததும் ஒருவருக்கு காயம் ஏற்பட்டதும் ஓர் அபசகுனமாகும்.

6. ஸ்ரீசக்கர யந்திர பூசையை சுருக்கமான முறையில் பூதசுத்தி லிங்கசுத்தி கர அங்கநியாச அபிடேக திரவிய நைவேத்திய அர்ச்சனை வழிபாடு ஆகியவற்றில் லோபித்தனமாக பிரம்மச்சரிய குரு ஒருவரால் நடத்தப் பெற்ற தன்மையும் ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

7. விஜய தசமியன்று வாழை வெட்டும் நேரத்தில் நடைபெற்ற அசம்பாவிதத்தால் மக்கள் பீதியடைந்துள்ளர். ஆகவே ஆகம முறைப்படி ஆராய்ந்து ஆவன செய்வது கடமையாகும்.

ஆலய நிர்வாகத்தில் கவனிக்கப்பட வேண்டியன—

1. ஆலயத்தில் பங்குகொள்ளும் அங்கத்தவருள் எத்தனை பேர் சமய தீட்சை பெற்று ஆசாரமுடையவராய் மது மாமிசம் அருந்தாதவராய் சமய அடிப்படை அறிவைப் பெற்றவராய் இருக்கிறார்கள்.

2. சமீபகாலத்தில் கன்னியர் வருகை அதிகரித்துள்ளது. அவர்களில் ஆசாரம் நடையுடை என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். கண்டி தலதா மாளிகையுள் சீருடையின்றி உட்பிரவேசிப்பதைத் தடை செய்திருப்பதையும் அறியத்தருகிறோம்.

3. ஆலயத்தின் அசைவுள்ள பொருட்களின் பட்டியல் வருடா வருடம் நிர்வாகத்தில் தொண்டாற்றாத ஏனைய தொண்டர்களால் ஒப்புநோக்கி அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறதா? புதிய பொருட்கள் உடனுக்குடன் பட்டியலில் இடம்பெறுகிறதா?

4. அடியார்களால் நேர்த்திக்கடன் காரணமாக கொடுக்கப்படும் பொருட்களுக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டு கொடுபடுகிறதா? அவர்களால் கொடுபட்ட பவுண் பொருட்கள் அம்பாளுக்கே உரியது இவை உருமாற்றப்பட்டு பிறருக்கு உதவப்பட்டதா?

5. நிர்வாகத்தால் பெறப்படும் பணம் எல்லாவற்றுக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு காசுப் புத்தகத்தில் பதியப்பட்டு வருகிறதா. செலவினங்கள் சபையால் அங்கிகரிக்கப்பட்டு உரிய பற்றுச்சீட்டுடன் பதியப் படுகின்றனவா? வருடாவருடம் வரவு செலவு ஒப்புநோக்கி அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறதா? 1977–78ம் ஆண்டுகளில் பெருந்தொகைப் பணம் பற்று வரவு செய்யப்பட்டபடியால் அரசாங்க அனுமதி பெற்ற கணக்குப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை வெளியிடுவது மிகப் பொருத்தமும் முறையுமாகும். வீண் பழிச்சொற்களுக்கு இடமிராது.

6, இவ்வாண்டு நவராத்திரிப் பூசையை கோயில் பிரதம குரு சிவசிறி குமாரசுவாமிக் குருக்களே செய்து வந்தார். எனினும் இரு நாட்கள் சிவசங்கர குருக்கள் [மனோகரன்] பூசை செய்தார். அச் சமயத்தில் படம் பிடிக்கப்பட்டது. இதன் மர்மம் என்ன?

7. முன்பு சிவசிறி குமாரசுவாமிக் குருக்கள் தம் பாவிப்பில் வைத்திருந்த ''பிரதம குருவெனப் பெயர் அச்சிடப்பட்ட விலாசத்தாள்களை நிர்வாக சபையினர் அவரைக் கண்டித்து அத்தாள்களைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் இப்போ மனோகரன் குருக்கள் அவ்வாறு பெயர் விலாசம் அச்சிட்டு உபயோகிப்பது தெரியுமா?

8. ஆலய வீதிகளில் கட்டிடங்களுள் பஞ்சமா பாதகத் தொழில்கள் நடைபெறுவது தெரியுமா? நடைமுறைகள் கையாளப்படுகிறதா?

9. அம்பாள் அடியார்கள் ஆலயத்தில் அங்கப் பிரதட்சணம் செய்வதற்கு பணம் வசூலிப்பது சரியா?

10 ஆசார சீலமுள்ள தொண்டர் சபை ஒன்றை உருவாக்கிச் சமய முறைப்படி ஆலயத் தொண்டுகளை நிறைவேற்றுவது மிக அவசியமும் போற்றுதற்குரியதுமாகும்.

மேற்படி விடயங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தமை பற்றி எவ்விதத்திலும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. பட்டம் பதவிக்காகவும் பாடு படவும் இல்லை. திருக்கோவிலில் ஏற்படும் குறைகுற்றங்கள் அவ்வூர் மக்களையே தாக்கும் என்ற நோக்கத்தாலேயே எழுதுகிறோம்,

இக்கடிதம் கிடைத்தது பற்றியும் இக்கடிதம் காரணமாக நீவிர் எடுத்த எடுக்கத் தீர்மானித்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் எழுத்து மூலம் தெரியப்படுத்துவீர்களென எதிர்பார்க்கிறோம்,

இங்ஙனம்
அம்பாள் அடியார்கள்

தி .ஆறுமுகசாமி ஆ .கனகசபை க ,கனரத்தினம் வெ .நடராசா
கோ . கணபதிப்பிள்ளை ஆ . வைரவப்பிள்ளை மு . சின்னத்துரை
க .வேலாயுதம் வி எஸ் .கனகரத்தினம் இ .ஞானசிவம்
அ .சரவணபவான் ந ,தமிழ்செல்வன் ச .நடராசா அ .செந்தில்
நாதன் .கேரவீந்திரன் நா .ஈஸ்வரன் சி .சண்முகராசா க . ஸ்ரீஸ்கந்தா
ந .ஜெயதரன் வ .குமாரசாமி நா .ரவீந்திரன் க .கனகரத்தினம்.

# கோயில் பால் குருக்கள் வயிற்றில்

ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலிற்கு ஒருவர் அபிஷேகம் செய்யும் படி பால் இளநீர் கொடுத்தார். அன்று பகல் ஒரு கலியாணம் அக்கோவிலில் நடந்தது. அன்று அந்த கோவில் பிரதிட்டா இரத்தினம் என்பவர் கோண்டாவில் சிறுபான்மை சமூகத்தாரின் கோவில் ஒன்றில் கொடியேற்றப் போய் இருந்தார். ஆதலால் கலியாணம் செய்ய வேறு குருக்கள் வந்தார்.

வந்த குருக்களுக்கு உபசாரம் செய்ய தேனீர்க்கு பால் இல்லை. கோயில் பால் இருந்தது. காய்ச்சி கொடுபட்டது. பால்கொடுத்தவர் பூசைக்குச் சென்ற போது அங்கு பால் அபிஷேகம் செய்யப் படாமை கண்டு காரணம் கேட்டபோது பால் கலியாணக் குருக்களுக்கு கொடுபட்டமை துல்லியமுடன் விளக்கப் பட்டது. பாலுக்கு அரோகரா பிள்ளையார்க்கு அரோகராவில் முடிந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம்கோவில்கள் பாதிரிமுறையை பார்த்துஒழுகலால் சைவம் பாழாகின்றது.

## பாதிரி முறையான போதிப்பை மட்டும் கோயிலில் பெரிதாகக் கருதிடலால் சைவக்கிரியைகள் நிலையற்று தூய்மை கெட்டன. அந்தணர் ஒழுக்கக் கேடு மிகுந்தனர். சைவத்தின் மெய்த்திரு அழிந்தொழிந்தது. என்றே இனி சைவமணம் எம்நாட்டில் கமழும்?

முன்பக்கத்தில் தரப்பட்ட தேவாரத்தை நாம் நன்கு சிந்தித்தால் நமது அந்தணர்களின் உயர்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது நன்கு தெளியப் படும். அத்தேவாரத்தை ஊன்றிச் சிந்தித்து தெளிய வல்லார் ஒரு சிலர் விரல் விட்டு எண்ணக் கூடியவர் தான் இருப்பார் என எண்ணுகின்றோம். ஏன் எனில் உயர்வான நிலையில் சிந்திக்கும் ஆற்றல் நம்மவரிடை அருகி உள்ளது; இது தவக் குறைவு எனலாம். கலியால் பீடிக்கப் பட்ட இந்த உலகிலே சைவ நெறிகளைக் கடைப்பிடிப்பதை மறந்து வேறு வேறு சிந்தைஉடையராக மக்கள் மாறிக் கொண்டனர். யுகத்தினுடைய ஆற்றல் தனது வலியை நன்கு காண்பித்து உலகை தன் வசத்தில் வைத்து ஆட்டுகிறது, ஆனால் இந்தக் கலியின் வேகத்தை தமது நித்திய அக்கினி வழிபாட்டின் செயலால் வென்று உண்மை உணர்ந்து உலகை நெறிப்படி வாழவைத்தார் அன்றிருந்த தில்லைவாழ் அந்தணர் என ஞானசம்பந்தப் பெருமான் சொல்லும் போது அது உண்மையோ அன்றி உபசாரமோ என்ற வகை ஐயப்பாட்டுடன சிந்திக்க வேண்டி வருகிறது. உண்மை என்றால் ஏன் அதை இன்றைய அந்தணர் விரும்புவதும் செய்வதுமில்லைஎன்பது கேள்வியாகின்றது. இந்தக் கேள்விக்கு விடைகாண்பதென்றால் பூனைக்கு மணிகட்டுவது யார் என்று எலிகள் சிந்தித்தவாறு போலத்தான் இன்றுள்ள நிலையில் கலியின் தொடர்பால் பீடிக்கப்பட்ட பிராமணகுலம் தம் கடமையின் உணர்வு கெட்டு தத்தளிக்கின்றது.

எல்லாப் பிராமணர்க்கும் தங்கள் தங்கள் உயர்வு, நெறி, கடமைவிளங்காமல் இல்லை, ஒரு சில காடைத்தனமான காவாலிகளான பிராமண இளைஞர்களுக்குச் சிலவேளை விளங்காமல் இருக்கலாம். பெரும்பாலான அந்தணர்க்குத் தம் உயர்வு விளங்குகின்றது எனினும் செயல்படும் நிலைதான் சிக்கல். இதற்கு இன்று காரணமாக உள்ள முதற் குற்றவாளிகள் மடாதிபதிகள், பிரசங்கியள், அரசியல்வாதிகள் எனலாம். இவர்கட்கே பிராமணரது உயர்வும் கடமையும் யாது என விளங்காமல் போயது. பிராமணரையும் ஏனைய தொழிலாழி போன்று தம் சீவியத்திற்காக தொழில் செய்யும் ஓர் தொழிலாழி எனக் கருதிக் கொண்டனர். ஆனால் உண்மை நிலை அப்படி அன்று. இது விளக்கக் குறைவால் விளைந்த பெருங் கேடாக வந்துவிட்டது.

அடிக்கடி நமது தீபத்தில் மடாதிபதிகளும் சமயப் பிரசங்கிகளும் சமயவியாபாரிகள். இவர்களால் ஏதும் நன்மை எமது சைவ நெறிக்கு வராது. இவர்களை கோயிலில் அழைத்துக் கோயிலில் பிரசங்கம் செய்வியாதீர். இது கோயிலில் பழியைப் பொக்கி நாட்டில் பெரும் அபசாரநிலையை வளர்த்துவிடும் என நாம் சொன்னோம். ஏன் சொன்னோம் எனின் இறைவன் சந்நிதியில் ஏமாற்றம் ஆகவே ஆகாது என்றமையால் சொன்னோம். எம்பிரான் சிவனுடைய கோயில்கள் நாயன்மார்காலத்து மிக அருளிப்பாட்டுடனும் உண்மை அன்பு தவம் முதல் தூயதொண்டிற்குரியனவாகவும் இருந்தன. அன்று நாயன்மார் சோவிலுக்குச் சென்று வழிபடும்போது எப்படி வழிபட்டனர்? எப்படிப் பாடினர்? எப்படி வணங்கினர்? இதைச் சிந்தியுங்கள். திருநாவுக்கரசரும் நேராக ஒரு வண்டியில் கோயிலுக்குப் போய் வாசலில் இறங்கி அங்கு மேடைமேல் ஏறி இருந்துகொண்டு தந்தனத்தோம் என்று பாட்டுக்கச்சேரி வைத்தாரா? அல்லது பக்கவாத்தியசகிதம் பிரசங்கம் வைத்தாரா? அவர் வாசலில்வர ஐயர் ஓடிப்போய் அவருக்கு பஞ்சாலாத்தி காட்டினரா? காளாஞ்சி கொடுத்தாரா? இறைவன் சந்நிதியில் ஏதேனும் ஒரு மதிப்பை அங்கு பெற்றாரா? பட்டம் பெற்றாரா? அவர் கோயில்சென்று கோபுரமுன் வீழ்ந்து வணங்கி அப்பால் கோயிலை வலம்வந்து உள்சென்று சுவாமி சந்நிதிமுன்பு நின்று தம் உள்ளம் உருக என்புருக பரவசமாகிப் பாடிப்பணிந்தார். இதே போன்றுதான் சம்பந்தரும். அவரும் சிறு குழந்தைப் பருவத்திலும் கோயில் செல்லும்போது குழந்தை தூரதேசம் நடக்கமாட்டார் என உணர்ந்து தந்தையார் தோளில் தூக்கிச் சுமந்துசெல்ல அதை விரும்பாது அடியவருடன் நடந்து சென்றவர். நடந்துசெல்லும்போது கால்நொந்து மெதுமெதுவாக சோர நடப்பதை உணர்ந்து திருஅரத்துறை ஈசன் முத்துச்சிவிகை கொடுத்தருளினர்.

சிவன்தந்த சிவிகை அது ஆதலின் உலகம் உய்யச் சிவிகைமேல் ஏறினர் திருஞானசம்பந்தர். இதனால் அவரை ஞானமுனிவன் எனப் பெரியோர் போற்றுகின்றனர். இந்த அரும் பெருமை நிலையை பெரியபுராணம் நன்கு தெரிவிக்கின்றது. பெரியபுராணம்பற்றி பேச்சுக்கள் நிறைய நடக்கின்றன. பெரிய புராணத்தைப் பேசிவிட்டு பெரும் வித்துவான்கள் சிவத்தமிழ்கள் தம்பிரான்கள் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் அதுதான் பேச்சு ஒன்று செயல் ஒன்றாக கோழி அறுத்த பாதிரியார் போலவே இன்று சைவசமயப் பிரசாரம் காணப்படுகின்றது.

மானிப்பாயில் முன்பு ஒரு கிறீஸ்த்தவ போதகர் இருந்தாராம். அவர் தம் சேர்ச்சிற்கு ஞாயிறு பிரசங்கத்திற்கு புறப்பட்டு போக வேண்டி போவதன் முன்னம் மத்தியான சாப்பாட்டை நினைந்து வேலை காரனை நோக்கி இன்று மத்தியானச் சாப்பாட்டிற்கு ஒரு கோழி உரித்து கறியாக்கிவை எனச் சொல்லிய பின் அருகில் உள்ள தமது சேர்ச்சிற்கு காலைப் பிரசங்கத்திற்கு போகிறார், அவர் போக அவர் சொற்படி வேலைக்காரன் ஓர் கோழியைப் பிடித்து அதை ஓரிடத்து ஓடாதபடி மூடிவைத்த பின் அன்றைய வழிபாட்டுப் பிரசங்கத்திற்கு தானும் போக வேண்டி இருந்ததால் தானும் சேர்ச்சிற்கு வழிபாட்டில் கலந்திடப் போனன். ஏன் எனில் ஞாயிறு பிரசங்கத்திற்கும் போக வேண்டியது கட்டளை. அதுவும் போதகர் வீட்டு வேலைக் காரன் சேர்ச்சிற்கு போகவில்லை என்றால் பின்னர் மற்றையோர் கேள்வியின் பிரச்சனை வரும். ஆதலின் அவன் அங்கு போயினன்.

போகமுன் கோழியை அறுத்து உரிக்க மனம் வரவில்லை. ஏனெனில் கோழியை அறுத்து உரிக்கும் வேலையில் நின்றிருந்தால் பிரசங்கத்திற்கு நேரத்திற்கு போக முடியாது. ஆதலால் அவன் கோழியை வேறிடம் ஓடாதபடி மூடி வைத்து பிரசங்கத்திற்கு போனன். சேர்ச்சில் சென்று பின் வரிசை வாங்கில் இருந்து அன்றைய போதகரின் போதனையைக் கேட்டான்.

அன்று ஏழு கட்டளைகளில் கொல்லாமை பற்றிப் போதித்தார் போதகர். அவர் அங்கு இருந்தமக்களை நோக்கி அன்பர்களே இறைவனுடைய படைப்பில் ஓர் உயிரையும் கொல்லக் கூடாது என்பது யேசுவின் கட்டளை. இதை நீர் நன்கு உணர வேண்டும் என வடிவாக அழுத்திப் பேசினர்.

இயேசு மீது கொண்ட பத்திமை வேலை காரனுடைய சித்தத்தில் ஓர் மாற்றத்தை வருவித்தது. அவன் நினைந்தான் இயேசுவின் கட்டளை இதுவாயின் நாம் அதை மதிக்க வேண்டும் என உடன் எழுந்து வீடு சென்று கறிக்குமூடிவைத்த கோழியை திறந்துபோகும் படி விடுத்து இயேசுவின் புண்ணியத்தால் நீ தப்பிப் பிழை என அதைக் கொல்லாது விடுதலையாக்கிய பின் வேறு காய்கறி வாங்கிச் போதகர்க்கு சமைத்து வைத்தான் அன்றுகோழிக்கறிக்குப் பதில் மரக்கறிகளே சமைக்கப் பெற்றிருந்தது.

சமையல் முடிந்து போதகர்க்கு சாப்பாடுதயார். போதகர் சாப்பிடக்குந்தினர். கோப்பைகளில் மரக்கறிகளே இருந்தன, போதகர்க்கு பொல்லாத ஆத்திரம் எழுந்தது. வேலைக்காறனை நோக்கி ''எங்கடா கோழி இறைச்சிக்கறி'' எனக் கேட்டார் வேலைக்காறன் சொன்னன் 'ஐயோ ஐயா தாங்கள் காலைப் பிரசங்கத்தில் கொலை செய்தல் பாதகம் என ஆண்டவர் சொன்னதாகச் சொனீர்கள், அதனால் நான் உங்கள் சொற்படி மூடிவைத்த கோழியைக் கொல்லாது துரத்தி விட்டேன்.'' இப்படி வேலைக்காரன் சொன்னதும் அது கேட்டு கோபமுடன் போதகர் சொன்னர் ''உன்னிடம் நான் சொன்னது கோழிக் கறி ஆக்கச் சொல்லி. பிரசங்கத்தில் கொலை பாவமென ஊர்மக்களுக்குச் செய்தேன், உனக்கேன் அந்தக்கதை நான் சொன்னதைச் செய்யாமல் ஏனடா மடையா கோழியைத் திறந்து விட்டாய்'' எனக்கூறினர் என்ற ஒரு கதை உண்டு. வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் எமது கந்தபுராண விரிவுரையின்போது ஓர் அன்பர் இக் கதையைக் குறிப்பிட்டு இதுசெய்த போதகர் பெயரும்சொன்னர்.

இப்படியாக போதனை ஒன்றும் செயல் ஒன்றுமாகவே இன்று பெரும் பாலும் சமய நிலைகள் இருக்கின்றன. இந்த ஒரு நிலை தான் நமது சைவத்திலும் ஏற்பட்டுக் கொண்டது. பெரிய புராணம் சைவ நெறியின் புனிதம் நிறைந்தது. அதன் புனிதத்தை உணராது அங்கு சொல்லி சைவ சீலங்களை உணராது வெறும் கதையை மட்டும் சொல்லி வேடிக்கையும் பேசிப் போதலுடன் தக்க காசும்கொண்டு போவதாகசமய நிலை மாறிவிட்டது, நாயன்மார் காலத்தை எடுத்துக் கொண்டால் நமது சைவக் கோவில்களில் கூட்டுவழிபாடு போதனை முறைகள் நிகழவில்லை பெரிய புராணத்தை விளங்கினால் இவை தெளிவுறும்.

ஒரு கோவிலில் செய்யப்பட வேண்டிய உண்மைக்கிரியைகளிலும் பிரசங்கம் முக்கிய இடம் பெறுகிறது. கோவில் கும்பிடச் செல்வதை விடுத்து மக்கள் பிரசங்கத்திற்கு பாட்டுக் கச்சேரிக்கு போவதை விரும்பு கின்றனர். ஒரு கோவிலில் பிரசங்கத்திற்கு போய் கேட்டு முடிந்ததும் மக்கள்கோயிலைத் திரும்பி பாராமல் வீடுநோக்கு கின்றனர். சைவ மெய்த்திரு என்றால் கோவிலில் இறைவனுக்குச் செய்யும் புனிதமான கிரியைகள். அவை யாகாதிகருமங்களும் அபிஷேக ஆராதனைகளும் வேதம் ஓதல் தோத்திரம் முதல் பல சிறப்புக்கள் எனசைவநூல்கள்சொல்லும். இவையன்றிகோவிலைச் சென்று வலம் வந்து வழிபட்டு மலர் கொய்து கொடுத்துவிளக்கிட்டு பணிபுரியும் பல தொண்டுகள்யாவும் திரு எனப்படும். இப்படிஏத்தும் இன்பம் இன்பம் என்றும் கிரியைகளை முறைப்படி செய்து ஈசன் திருவடி போற்றுதல் செல்வத்துள் செல்வம்என்றும் சம்பந்தர் முற்பக்கத்தில் தரப்பட்ட தேவாரப் பதிகத்தில் சொல்வதை நோக்குங்கள்,

இப்படியாக கோயில் கிரியைகளை நன்முறை நடத்திட செய்வாரும் செய்விப்பாரும் காண்பாரும் யாருமே சைவத்தின் உண்மைத் திருவைப் பெறுகின்றார். ஆனால் இன்றெனின் அந்தணர்களுடைய ஒழுக்கக் கேட்டாலும் சைவக்கிரியைகளில் நம்பிக்கை குறைவாலும் எந்த ஒரு கோவிலிலும் ஒழுங்கு முறையான விதிகளை சைவத்தின் திருவுடைய செயல்களைக் குறைத்து திருவற்ற போலிச் செயலான பிரசங்கம் பாட்டுக் கச்சேரி வில்இசை ஐயோ வாயால் சொன்னாலும் பழிபெருக்கும் பொப்பிசை கூத்து முதல் பல அருவருக்கத்தக்க செயல்கள் நடை பெறுகின்றது.

தம் வயிற்றுப் பிழைப்பை மட்டும் எண்ணுகின்ற பிராமணர்கள் யாவரும் மேற்காட்டிய அபசாரச் செயல்களை ஊக்கு விப்பராய் குத்தகைக்கு காசு வாங்கி இவற்றைச் சில கோவில்களில் செய்விக்கின்றார். ஏன் இப்படி இதை அந்தணர் விரும்புகிறார் என்றால் கோயிலில் ஒழுங்கான படி கிரியை செய்ய வேண்டு மென்றால் தாமும் ஒழுங்காக நடக்கவேண்டும். ஒழுங்கா நடப்பதென்றால் தாம் கண்டபடி நடக்க முடியாது. கண்டகோட்டலில் சாப்பிட ஏலாது சினிமாவிற்கு போக ஏலாது சாராயம் கள்ளு இரகசியமாக் குடிக்க ஏலாது தாங்கள் பெண்களை கண்டபடிநடக்கவிட இயலாது இப்படி பல சச்சரவு கோவிலில் ஒழுங்கு இருந்தால் நேரிடும் ஆதலினால் தாம் கண்டபடி ஒழுகுவதற்கு இடைஞ்சலிலாத வகை முதல் கோவிலில் நடைபெற வேண்டிய செயலைக் குறைத்து விட்டு அபசாரச் செயலை மிகைப்பட வைத்து விட்டால் தம்பாடு சுகம். கேட்பவர்க்கு இலேசாகப் பதில் சொல்லலாம். என்னென்றால் எல்லாரும் பிழையாய் நடக்கும் போது எங்களை மட்டும் சரியாய் நடக்கவா கேட்கின்றீர்: எங்களுக்கு ஆசை உண்டு. நாங்களும் மனிதர் தானே? எனச் சொல்லிடலாம். இப்படியாக அந்தணர்கள் தம் அறநெறியை உணராது தவறுகளில் இறங்க வழிகாட்டிய மிலேச்ச நாட்டுச் சமயங்களில் பாதிரி முறை வழிகாட்டிக் கொண்டது. வள்ளுவரும் பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றச் சைவம் கெடும் என்றார். இந்தத் திருக்குறளை யாரதல் யார் விளங்கப் போறார். எனது தூய கருத்து அந்தணர்கள் தம் தூய நெறி உணர்ந்து நெறிப்பட ஒழுகாதிருந்தால் சைவம் தேய்ந்து அன்றியும் போதனை முறையான பிரசங்கம் கோவிலில் நடைபெறுவன சைவத்தில் ஏதும் நன்மையை வருவிக்காது. இதனை எல்லாரும் உண்மை என உணருங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org